யிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 29.

## தமிழிசை.

இராகம்:-அடாணா. தாளம்:-சாபு.

தமிழின் மணம் வீசுதடி
 சத்யம் நிலையாச்சுதடி

அமுதினும் இனிமை இனிமை
 ஆ ஆ ஆ நானென்ன சொல்வேன்
சமஉரிமை தந்தே மக்கள்
 தம்மதிப்போடு வாழச்செய்த (த

கலைநிறைந்தே விளங்குதடி
 கண்மணிபோல் துலங்குதடி
தலைசிறந்தே இலங்குதடி
 சங்கப்புலவர் கொண்டதடி

நிலைத்தே என்றும் நின்றதடி
 நிகரில்லாமல் ஓங்குதடி
மலையும் உருகிக் கரையுதடி
மதிக்கும்இசைக்குப் பொருத்தமடி(த

பி. ஜெகன்னாதன், ஆசிரியர்.

# திராவிடநாடு திராவிடர்க்கானால்?

கோ. சி. பெரியசாமி புலவர்.

அன்பர்களே!

உலகம் பெரும்போரின் காரணமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு இனத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்களிலும், மனப்பான்மைகளிலும் இடைவிடாத மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. தனிப்பட்டவர்களின் பழக்கவழக்கங்களிலும், உளப்பாங்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்முறை அரசியல் கட்சியில் புகாதிருக்குமா?

"தென்னிந்திய நலவுரிமைச்சங்கம்" என்பதைத் "திராவிடர் கழகம்" எனச் சேலம் மாநாட்டில் மாற்றப்பட்டு ஒப்புக்கொள்ளப்பெற்ற செயலும் நம் உளப்பாங்கில் சிறிது மாற்றத்தைக் காட்டுகிறது. யாம் இந்தியரல்லர்; திராவிடர் என முழங்குகிறோம். ஏன் அவ்வாறு கூறினோம். "இந்து" என்றால் முடிச்சவிழ்ப்பவன், அடிமைப்பட்டவன், இழிந்தவன் என்றுபொருள் தரும் முறையில் பாரசீக மொழியில் அம்மொழியாளர் பொறித்து வைத்தனர். யாமும் இந்து என்ற சொல்லின் பொருளறியாதாராய் அப்பெயரைத்தாங்கிவந்தோம். அச்சொல் இழிந்த பொருளைத் தருவது எனப் பெரியார் ஈ. வெ.ரா. எடுத்துக்கூறினார். ஏற்றுக்கொண்டோம், பெயரில் மாற்றம் கண்டோம். இப்பெயரை விரும்பாதார் வேறு என்ன காரணங்கூறுகின்றனர்? நாட்டிற்காக நாம் போரிடும்பொழுது பெயருக்காக நம்முள் பூசல்விளைக்க எண்ணிப் பிற்போக்காளர்களைத் தூண்டிவிட்டுப் பிளவினை உண்டாக்க முயலுவோர் பெரிதும் ஏமாற்றமடைவார்கள் என்பதை அறிவுறுத்தி அச்சுறுத்துகின்றேன்.

### நம் கட்சியை யார் காப்பாற்றினார்கள்?

சென்ற பொதுத் தேர்தலில் நம்கட்சி தோற்கடிக்கப்பெற்றவுடன்பணம்படைத்தோர் பதுங்கிவிட்டனர், பணக்காரர் கட்சி என்று நம் கட்சியைப் பகைவர்கள் தூற்றினார்கள். எளியவர்கட்கும், நீதிக்கட்சிக்கும் தொடர்பில்லை என்றார்கள். பெரியார் ஈ. வெ. ரா. தலைமை ஏற்றவுடன் ஏழைகட்கு அடிமைமக்கட்கு, திராவிடமக்கட்கு, நீதிக்கட்சிபல்லாண்டுகளாகப் பணிபுரிந்துள்ளதென்பதைப் பொதுமக்கள் உணர்ந்தார்கள். பொதுமக்கட்கும், நீதிக்கட்சிக்கும் தொடர்பை உண்டாக்கியவர் பெரியார் ஈ. வெ. ரா, அவர்களேயாவர். குறுநில மன்னர்கட்கும், படித்தசில பட்டதாரிகட்கும், பத்திரிகாசிரியர்கட்குந்தான் நீதிக்கட்சி என்ற நிலைமைமாறி இன்று பாட்டாளிமக்கள் யாவரும் நீதிக்கட்சியை ஆதரிப்பதற்கு உரியகாரணம் பெரியார் ஈ. வெ. ரா. உழைப்பன்றோ? இதுவரையும் நீதிக்கட்சித்தலைவர்களாயிருந்தோர் பெரியார் ஈ. வெ. ரா. பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றுகின்றாற்போலப் பணியாற்றிமக்களுள்ளங்களைப் பிணித்தாருண்டோ!

### திராவிடர் கழகம் நகைப்பா?

காலஞ்சென்ற திவான்பகதூர் டாக்டர் நடேசமுதலியார் அவர்கள் பல ஆண்டுகட்கு முன்னர் திராவிடர் கழகம் என்ற பெயரமைப்பின்கீழ்த் திராவிடர்களை ஒன்றுபடுத்த முயன்றதையும், திராவிடர் கழகம் என்ற பெயரே சிறப்புடையதென்று கொண்டு, சென்னையில் திராவிடர் கழகம் நாட்டிப் பணியாற்றியதையும், அரசாங்கமும் இக்கழகத்தை மதித்து ஆவனசெய்ததையும் இன்று எதிர்ப்புக் கூச்சலிடுவோர் எண்ணிப் பார்க்கவேண்டுகிறேன். காலஞ்சென்ற தலைவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றியே திராவிடர் கழகம் என்ற பெயரை அமைத்துள்ளார்கள் என்பதை எதிர்ப்பாளர்கள் அறிவார்களாக.

### திராவிடம் என்ற சொல் திருவிடப்பெயரே.

திராவிடர் என்றசொல் வடமொழியில் முன்னரேயே பெய்து பேசப்பட்டிருப்பினும், 17ம் நூற்றாண்டில் இருந்த குமாரிலப்பட்டர் தம்நூலில் சிறப்பாக ஆந்திர திராவிட பாஷா என அமைத்து வழங்கினார். கன்னடம் துளுவம், தமிழ் முதலியமொழிகளை எல்லாம் உள்ளடக்கியே அவர் திராவிட என்றசொல்லை அமைத்து மொழிந்தார். இவ்வமைப்பு முறையை டாக்டர். கிரேயர்சன், கால்டுவெல் முதலிய மேனாட்டறிஞர்களும் பின்பற்றித் "திராவிடமொழிகள்" என்ற பகுப்பில் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் முதலியமொழிகளை அடக்கி மொழிந்து அவ்வம்மொழிகளின் இயல்புகளையும் பற்றி ஆராய்ந்து சென்றனர். திராவிடமென்றால் ஓடிவளைந்தது என்ற பொருளில் மாதவச் சிவஞான யோகிகள் குறிப்பிடுவர். ஓடிவளைந்ததென்றால்எவ்வளவுவரையெனின்? குமரியோடு வடஇமயத்தொரு மொழியாகத் தமிழ் ஓடிவளைந்ததெனத் தமிழ் இலக்கியங்கூறுகின்றது. சொல்லாராய்ச்சியை மிகுதியாக்காமல் மேலே செல்லுகின்றேன்.

### ஆச்சாரியரும் யாமும்.

"திராவிட நாட்டுப் பிரிவினையைக் குறித்து என்னகூறுகின்றீர்கள்" என ஒருசெய்திஅறிவிப்பாளர் டாக்டர் இராசகோபாலாச்சாரியார் அவர்களை வினவினார். அவ்வினாவிற்கு விடையாக ஆச்சாரியாரவர்கள் "பெரியார் ஈ. வே. இராமசாமிக்குப் பிராமணரல்லாதார் ஆதரவுகிடைத்தால் அதுகுறித்து ஆராயலாம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்களாம். திராவிடர்களின் ஆதரவு ஒருமுகமாகப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்குக்கிடைக்க வேண்டுமென இந்தியைத் தென்னாட்டில் நுழைத்து இடர்விளைவித்த ஆச்சாரியார் கூற்றை ஆய்ந்து பார்த்தேனும் பெரியாரை எதிர்ப்போர் பணிந்தெழுவார்களாக.

### அன்றும் இன்றும்

இந்தியைத் தென்னாட்டில் புகுத்திய காலையில் "ஏன் புகுத்தினீர், எங்களைக் கேட்காமல் என ஆச்சாரியாரை யாம் கேட்டோம். ஆச்சாரியார் கூறினார்! இந்தியா சுயேச்சை பெற்றபின்னர் எல்லா இந்தியத் தலைவர்களும் "மைய" அரசியல் மன்றத்தில் ஒருமொழியில்பேசி உயர்வுகாணவும் பொதுமொழி ஒருநாட்டிற்கு இன்றியமையாது வேண்டுமென்பதைக் கருதியும் யாம் இந்தியைக் கட்டாயமாககினோம் என்றார்.

### ஒரு நாட்டாட்சிக்குப் பொதுமொழி தேவையா?

பாரசீக அரசியல் ஒரு ஐந்நூறு அறுநூறு ஆண்டுகள்ஒருபொதுமொழியின்றி நாட்டாட்சியை நன்கு நடத்தவில்லையா? ரோமசாம்ராஜ்யம் எத்தனையோ ஆண்டுகளாகப் பொதுமொழியின்றி நாட்டாட்சியை நன்கு நடத்தவில்லையா? பண்டைக் காலத்தில் பாரசீக நாட்டாட்சியையும் ரோம் நாட்டாட்சியையும் இக்கால அரசியற்கு ஏற்புடையதாகக் காட்டல் கூடாதெனின், இதுபோது சுதந்தரத்துடன் போராடும் சீனநாட்டின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகின்றது? எண்ணிப்பாருங்கள். நம் இந்தியாவைப் போன்று பல மண்டிலங்களைத் தன்பால் கொண்டு மிளிரும் சீன நாட்டில் "மஞ்சூரியாவில்" ஒரு மொழியும் "மங்கோலியாவில்" ஒரு மொழியும் பேசப்பட்டும் ஆட்சி ஒழுங்குற நிகழவில்லையா? சனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டு சிறப்புற ஆட்சி புரியும் கனடா நாட்டிற்குச் செல்வோம். கனடாவிலுள்ளவர்கள் ஒரே மொழி பேசுகின்றனரா? அவர்

(11ம் பக்கம் பார்க்க)

# ஆரிய உரையாடல்.

(சித்திராபுத்திரன்.)

ஜோசியர்:— ஒய் அப்பு அய்யரே! உமக்கேன்காணும் இப்போது கண்ணே தெரிவதில்லை. சிறிதுகூட நன்றி விசுவாசமில்லை.

அர்ச்சகர்:— என்னங்காணும் ரொம்ப ரொம்ப மேலே பேசுகிறீர். எதிலே ஓய் நன்றிவிசுவாசமில்லாததைத என்னிடம் கண்டீர். நீர் எனக்கு ரொம்பவும் செய்துவிட்டாப்போலும், அதனால் நான் ஏதோ பலனடைந்துஉமக்கு நன்றிகாட்டவில்லை போலும்.

ஜோ:—ஆமாங்காணும்,இப்போசொல்ல மாட்டீரோ, தினே தினே ஐம்பது அறுபது அர்ச்சகத்தில் உமக்கு கிடைக்கிறது. இதற்கு யார் காரணம் என்பதை மறந்துவிட்டீர். நன்றி மறக்காதீர்காணும்.

அர்:— ஓ கோ! இதற்கென்னகாணும் உமக்கு நன்றி காட்டுவது, தினம் 50, 60' வருகிறது. அதற்குமேலும் சிலநாட்களில். திங்கள், வெள்ளி, சனிகிழமைகளுக்கு தினம் 100 ரூபாயும் வருகிறது. இதற்கு நீர் என்னங்காணும்தானுவதி? சண்டையில், கூலிக்காரன்முதல்சகலருக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு கொள்ளை அடிப்பதுபோல் பணம் சேருகிறது. அதிகாரிகளுக்கும் அதுபோலவே பங்கு வருகிறது, அந்த மடைப்பயல்கள் இந்தக் கொள்ளைகளையுத்தம்கொடுத்ததுஎன்று எண்ணுமல் பகவான்கொடுத்தார்என்று நினைத்துக்கொண்டு கோயிலுக்கு வந்து விழுந்து கும்பிட்டுவிட்டு எனக்குக் கொடுத்துவிட்டு போகிறுன்கள். இதற்கு நீர் என்னங்காணும்!

ஜோ:— அட நன்றிகெட்ட ஜென்மமே! அவன்கள் தானகவா வருகிறுன்கள். நானல்லவா அவன்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று ஒவ்வொருவனையும் பார்த்து, ஐயா! உமது ஜாதகத்திலே 8-ம் இடத்திலே சனிபார்க்கிறுன் 9-ம்இடத்திலே ராகு உச்சம் பெற்று இருக்கிறுன், 5-ம் இடத்திலே சுக்கிரனை வழி மறித்துக்கேது நிற்கிறுன் அதற்கு ஒரு வாரம் நவக்கிரக பூசைபண்ணவேண்டும், அஷ்டோத்திரம் செய்யவேண்டும், சகஸ்த்திர நாமம் பண்ணவேண்டும், எள் சாதம் படைக்க வேண்டும், மண்டலாபிஷேகம் பண்ணவேண்டும், கிரகசாந்தி செய்யவேண்டும், என்று எல்லாம் சொல்லி அந்த மடைப்பயல்களை கோவிலுக்கு நானல்லவா விரட்டி அடித்தேன். அதை நம்பித்தானே அந்தமடைப் பயல்களும் இப்படி எல்லாம் செய்தால் இன்னும் கொள்ளை கிடைக்கும் என்றும் கிடைக்காவிட்டாலும் வந்த பணமாவது போகாமல் இருக்கும் என்றும் கருதி கோவிலுக்கு ஓடிவந்து உமக்கு அழுதுவிட்டு வருகிறுன்கள்.நான்இப்படிச் சொல்லாமல் வேறுவிதம் சொல்லி இருந்தால்உமக்கு இந்தக்கொள்ளை கிடைக்குமா? நாளை முதல் பாரும் இந்தக் கூட்டத்தை அப்படியே விஷ்ணுகோயிலுக்குத் திருப்பிவிடுகிறேன். இதிலிருந்தாவது என் சங்கதி தெரிந்துகொள்ளும்,

அர்:— ஜோசியர்வாள்! அப்படி ஒன்றும் செய்துவிடாதீர்கள். இந்த மாதம் முதல் மொத்தமாக உமக்கு மீ 20 ரூபா வீதம் கொடுத்து வருகிறேன். இது தவிர மொத்தத்தில் எனக்கு மீ 100 ரூபாய்க்குமேல் வந்தால் மேல்கொண்டு வருவதில் சரிபகுதி 50 பர்சென்டு உமக்குத் தந்துவிடுகிறேன். இதல்லாமல் மற்றும் கிரக சாந்தி செய்வதற்கு என்று ஒரு அணு வந்தாலும் அதில் அரைஅணு உமக்குத் தந்துவிடுகிறேன். எப்படியாவது தினம் 10, 15, மடையன்களைப்பிடித்துச் சாந்திக்கும் கிரகதோஷத்திற்கும் தள்ளவேண்டியது உமது கடமை.

ஜோ:— அப்படிச் சொல்லுங்காணும் இப்போது தெரிந்ததா நம்ம சங்கதி? இனிப்பாரும் எத்தனைமடையன்களை அதுவும் ஜோடி ஜோடியாய்த் தம்பதி சகிதம் தள்ளிவிடுகிறேன் என்பதை. இதிலே ஒரு விஷயமன்னே?

அர்:— அதென்ன?

ஜோ:— இனிமேல் நீர் கொடுத்து வருவது சரி. இதுவரை நீர் அடித்த கொள்ளைக்கு எனக்கு பங்கு எங்கே? உம்ம வீட்டை ரிபேர்செய்துவிட்டீர். கிட்டத்தட்ட ஆறு, எழாயிரம் ரூபாய் பாங்கியில் போட்டிருக்கிறீர். உம்ம மூத்தார் மகளை டெல்லிக்குப் போட்டிப்பரீக்ஷைக்கு அனுப்பியிருக்கிறீர். உம்ம தாசி தங்கத்துக்கு 2000 ரூபாய் போல் நகை பண்ணிப்போட்டிருக்கிறீர். நீரும் தினம் பிரூந்தி ஒயிலுகவே சாப்பிடுகிறீர். லாலா கடையில் மாதம் 50, 60க்கு, பிரியாணி, வெளுத்து வாங்குகிறீர். நீரும் நன்றாய் அகலத்தில் வளர்ந்திருக்கிறீர். இவையெல்லாம் இந்த இரண்டு மூன்று வருஷத்தில்தானே! எங்காணும் எனக்குத் தெரியாதென்று இருக்கிறீரா? மொத்தமாகஎனக்கு ஏதாவது கொடும். இல்லாவிட்டால் இந்தச் சங்கதியெல்லாம் வெளியில் சொல்லி அத்தனை மடையன்களையும் விஷ்ணுகோவிலுக்குத் திருப்பிவிடுவேன். அங்கேயும் நவக்கிரக சன்னதி வைத்தாய் விட்டது தெரியுமா?

அர்:— ஓய், ஓய், சத்தமாகப் பேசாதீர்காணும், இதெல்லாம் உமக்கெப்படித்தெரியும்?

ஜோ:— உம்ம இளையசம்சாரம், இவைகளைஎல்லாம்உங்கவீட்டுக்குத்தினம் வருகிறுரே பெரியண்ண செட்டி அவரிடம்சொல்லி அழுதிருக்கிறுள். பெரியண்ண செட்டி இதை என்னிடம் சொன்னுன், நான் அவனை இதையெல்லாம் வெளியில்சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொண்டேன். நீர் சதா தாசி தங்கம் வீட்டில் புரளுவதும் அவளுக்குக் கிராக்கி படித்துவிடுவதும் பெரியண்ணசெட்டி தினம் உம்ம வீட்டுக்கு அவனுடைய பைகாட் ப்ரண்டுடன் வந்து புரளுவதும் யாருக்குத் தெரியாதுங்காணும்! நீர் எனக்குச் சரியானபடி மரியாதை செய்யாவிட்டால் கண்டிப்பாக நான்நோட்டீசு போடப்போகிறேன்.

அர்;— ஐயோ பாவி ஜோசியரே! இப்படி அபாண்டமாகப் புளுகுகிறீரே, தங்கம் தினம் கோவிலுக்கு வருகிறுள், அவளுக்காகச் செலவிடப் பையன்கள்கோவிலுக்குவருகிறுன்கள். அதிலே ரெண்டு காசு மாதம் 10, 20, என்றுவருகிறது. அதற்காகஅவளைத் தினம் பார்த்துக்கோவிலுக்கு வரச் சொல்வேன். இதுஎல்லாக்கோவிலிலுந்தானே நடக்கிறது. ரங்கநாதன் நடராஜன், அண்ணுமலை, முதலிய சாமி கோவில்களில் நடக்காததா, நம்ம கோவிலில் நடந்துவிட்டது? பெரியண்ணசெட்டி வீட்டிற்குவருவதைப்பற்றிப் பேசுகிறீரோ; கட்டளைக்காரன் போக்குவரத்தில்லாத அர்ச்சகன் வீடு ஒன்று சொல்லும் ஓய் பார்க்கலாம். அதனுலே கண்டதெல்லாம் பேசுவதா? லாலா கடைக்கு நான் ஏன்போகிறேன்? அவனுக்கு இப்போது வியாபாரம் ஜோர். அதற்காக அவன் மண்டலாபிஷேகம் செய்கிறுன். அதனுல்

(4-ம் பக்கம் பார்க்க)

# உரையாடல்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் கோவிலுக்கு வருகிறான். அப்படியே தங்கத்தையும் பார்த்து விட்டுப்போவான். அதன் நிமத்தம் அவன் கடைக்குப் போகிறேன். இதையெல்லாம் எவனோ அயோக்யப்பயல் இப்படிக்கட்டிவிட்டான். நீர் அதை நம்புகிறீரே, இது தர்மமா?

ஜோ:— ஓய் அசட்டுப் பிராமணா! இதெல்லாம் உம்முடைய இளையாள் சொன்னதுங்காணும். நான் சொல்லவில்லை. பெரியண்ணசெட்டி என்னிடம் நாள் பார்க்க வந்தான். நான் அவனுக்கு புதுயோகம்அடிக்கிறதென்று ஒரு பலன் சொல்லி, உண்மையா என்று சத்தியம் கேட்டேன். அவன் கொட்டிவிட்டான்.

அர்,— பகவான்தான் இவர்களைக்கேட்க வேண்டும். அந்த ஆதிகேசவன்கூலி கொடுக்கவேண்டும்.

ஜோ:— பகவான் என்ன? வெங்காயம் என்னங்காணும்? நடக்கிற காரியத்துக்குயாருக்குக்கூலி? உமக்குத்தான் கொடுக்கவேண்டும். அகராதிப்படி ஆதிகேசவன் என்றால் என்னதெரியுமா? ஆதியென்றால் பழையஎன்று அர்த்தம். கேசம் என்றால் மயிர் என்று அர்த்தம். ஆதிகேசவனென்றால் பழைய மயிராண்டி என்று அர்த்தம், நாம் நம்ம தேவ (சமஸ்கிருத) பாஷையில் சொல்லுவதால் அந்தமடைப் பயல்கள் கேட்டுக்கொண்டு அந்தப் பழைய மயிராண்டிக்கும் ஒரு கும்பிடு போட்டு நமக்குக் காசைக்கொடுத்து விட்டுப் போகிறார்கள். திராவிடன்களுக்கு மூளை ஏதுங்காணும்! அதுதான் அவாளை N. B. என்கிறோம். அவாள் நம்மை B. என்கிறார்கள், B. என்றால்என்ன தெரியுமோ? B. என்றால் Brain (பிரெயின்) பிரெயின்என்றால் அறிவு, N-B என்றால் No Brain அறிவில்லாதது. ஆகவே நாம்அறிவாளி. பிராமணா அல்லாதவா அறிவில்லாதவா. இது அவாளும் நாமும் சர்க்காரும் சேர்ந்து ராஜிமேலே ஏற்படுத்திக் கொண்டது.

அர்:— ஓய்! ஓய்! இதெல்லாம்இப்படிப் பேசாதிங்காணும் எவனாவது கேட்டுண்டிருந்தா உதைக்கப்போறான்.

ஜோ:—ஆ...போங்காணும் மூளை இல்லையென்றால் கோபம்வருமானா சூத்திரா,சூத்திரச்சிகள்என்பதற்கேகோபியாதவனுக்கு மூளை இல்லையென்றால் கோபம் வருமாங்காணும்! அவாளுக்குபடிப்பிருந்தால் அவாள் கோவிலுக்கு வருவாளா? வெளியிலே நின்று கும்பிட்டு நம்மமேலே படாமல் ஒடுங்கி அடங்கிப்போவாளா? அது கிடக்கட்டும் அது வெகு நாளைய சங்கதி. நம்ப காரியம் பார்ப்போம். நீர் பெரியண்ண செட்டி கட்டளைக்காரன் சும்மா வந்துபோகிறான் என்றீரே, நீரும் சிகப்பு உம்ம ஆம்படையாளும் சிகப்பு, உம்ம குழந்தை கரிசட்டிமாதிரி அவனைஉருக்கி வார்த்தாப்பலேயிருக்கு? அவன் குழந்தைகள் கூட இப்படியில்லையே! என்று பலபேர் பேசறா! (தனக்குள்ளே பேசிகொள்கிறான்) அதெப்படி இருக்கும்? அவன் தினமும் உம்ம வீட்டிலேயே யிருந்தால் கதவில்லாத வீட்டில் நாய் நுழைவது இயற்கைதானே! இதையெல்லாம் உம்ம ஆதிகேசவம் கேட்டு என்ன செய்ய முடியும்?

அர்:— சரி! உமக்குக் கோடிநமஸ்காரம் இந்தாரும் 500 ரூபாய் இனி மீ 50 ரூபாய் தருகிறேன், இந்தப் பேச்சை இப்படியே விட்டுவிடும். இனி நாம் சகோதரான்போல் இருப்போம்.

ஜோ:— சரி! எல்லாம்மறந்து விட்டேன், உண்மையிலேயே மறந்து போய் விட்டது, ஒரே ஒரு சங்கதி. —

அர்:— அதென்ன இன்னமும் சொல்கிறீரே!

ஜோ:— உம்ம தங்கம்மாளை நாளைக்கு

அர்:— எங்காணும்! அவளோ தாசி, அவளுக்கு நாயகன் பணந்தான். பணம் கொடுத்தால் அவள் நீர் இருக்குமிடத்திற்குப் பார்த்துண்டு வருவாள்.

ஜோ:— பணம் கொடுத்தால் அதற்கு நீர் என்னங்காணும்? உம்மதயவில் அவள் வரணும் என்றுதானே உம்மைக்கேட்கிறேன்,

அர்:— நாளைக்கு வெள்ளிக்கிழமை, அவள் கோவிலுக்கு வருவாள்,நீரும் அங்குவந்து அவளை ஆசீர்வாதம் பண்ணுகிறமாதிரி பேசி விட்டுப் போம். பிறகு அவளை உம்ம வீட்டுக்கு கிரகபலன் தெரியவரச்சொல்லுகிறேன். மற்றச்சங்கதியும் ஜாடைமாடையாகச் சொல்லி அனுப்புகிறேன். அப்புறம் நீரே பார்த்துக் கொள்ளுமே. நீரோ பிராமணர். உம்ம உடல் அவள்மீது பட்டால் மோக்ஷம் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்தச் சுலோகத்தையும் சொல்லி யனுப்புகிறேன் நீரும் உனக்கு இனி தோஷம்இருக்கிறது அதற்கு ஒருவாரம் சனி பகவானுக்கு நெய் விளக்கு வைத்து, 2 நாளைக்காவது பிராமண சேவை செய்தால் கிரக தோஷம்தீரும் என்று சொல்லிவையும். அவள்என்னிடம் வந்து சொல்வாள். அதற்கு நீரே சரி என்று சொல்லிவிடுகிறேன். அப்புறம் உம்ம சங்கதி அவள் சங்கதி...........

ஜோ:— எங்காணும்! அவள் தாசியாயிற்றே, மகாகெட்டிக்காரி யாயிருப்பாளே. இதற்கெல்லாம் ஏமாந்துவிடுவாளா?

அர்:— போங்காணும் பைத்யமே,தாசி என்ன? அநேக பெரிய வீட்டுப் பெண்களுக்கு எல்லாம் இம்மாதிரி சொல்லி அவர்களும் அப்படியே நடந்துகிரகதோஷத்தைத்தீர்த்துக் கொள்கிறார்கள். நீராய் கூப்பிட்டாலும் முடியும் நானாய்ச்சொன்னாலும்முடியும். சாமி-கிரகம் என்று சொன்னால் அவர்கள் சம்மதிக்காவிட்டாலும் அவர்கள் அவயவங்கள் முந்திவிடும். நம்மிட பெரியவாளைப் பயித்தியக்காரர் என்று எண்ணியிருக்கிறாய்? சூத்திராள் என்றால் அசல் சூத்திராள் தாங்காணும்.

ஜோ:—சரி! நமஸ்காரம், போய்வருகிறேன். நாளைக்குத்தானே.

அர்:—ஆம். நாளைக்குத்தான், நாளைக்குத்தான். நீர்மாத்திரம் இதையெல்லாம் வெளியில் சொல்லிவிடாதேதேயும்.

ஜோ:—இல்லை. இல்லை. தங்கம்மாளைத் தவிர மற்றதெல்லாம் முன்னமே மறந்து விட்டேன்.

அர்:—சரி, சரி.

நமோ நமஹா! நமோ நமஹா:

---

## பட்டாரியர் வாலிபர் சங்கம்

---

கோட்டாறு பட்டாரியர் வாலிப சங்கத்தினர் 15—9—44 மாலை 3-30 மணிக்குத் தலைவர்கள் A. V. முத்தையா, பூ திரவியம், சண்முகம், அண்ணாதுரை, பொன்னம்பலனார் ஆகியோருக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர். அது சமயம் ஷை சங்கத்தின் சார்பில், காரைக்குடி “குமரன் பத்திரிகைத்துணை ஆசிரியர் தோழர். A. சுப்பையா, திராவிட நாடு பத்திரிகைக்கு நன்கொடையாக 100 ரூபாய் தந்தார். தோழர் அண்ணாதுரை,உபசாரத்திற்கும் உதவித்தொகைக்கும் நன்றி கூறினார்.

# திக்கெட்டும் திராவிடமுரசு.

## திராவிடர் கழகம்.

### கடலூர் ஓ. டி.

16—9—44 சனிக்கிழமைமாலை 7மணிக்கு கூடலூர் பழைய பட்டினம் செட்டிகோவிலுக்கெதிரில் மா. பீட்டர் பி, ஏ; அவர்கள் தலைமையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் ஈ. வெ.இராமசாமி அவர்களின் 66வது பிறந்த நாள்கொண்டாடப்பெற்றது. கூடலூர் இளவழகன், வீரமணி, சென்னை சிவரத்தினம் பட்டுக்கோட்டை நெடுஞ்செழியன் பி. ஏ; ஆனர்சு ஆகியோர் பேசினார்கள்.

17—9—44 ஞாயிறு தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திராவிடர் கழகம் அமைக்கப்பெற்றது. தோழர்கள் வி. கே. சண்முகசுந்திரம் அவர்களைத் தலைவராகவும், ஏ. சி. கோவிந்தன் அவர்களைப் பொருளாளராகவும், வி. சிதம்பரநாதன் அவர்களைச்செயலாளராகவும் மற்றும் இருவரை உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

17–9–44 ஞாயிறுமாலை 7மணிக்கு மஞ்சகுப்பம் மைதானத்தில் சென்னை சிவரத்தினம் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் 66வது பிறந்த நாள் கொண்டாடப் பெற்றது. பட்டுக்கோட்டை நெடுஞ்செழியன் பி. ஏ; ஆனர்சு, வேலூர் பி. சனார்த்தனம் பி. ஏ; கூடலூர் இளவழகன், அழகரசன் ஆகியோர் பேசினார்கள்.

---

### சென்னை திருவல்லிக்கேணியில்

## திராவிடர் கழக திறப்புவிழா.

17-9-44 மாலை 6-மணிக்கு சென்னை திருவல்லிக்கேணியில் பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு, கே. சுந்திரம், பி. துரைராஜன் அவர்கள் பெருமுயற்சியால் தோழர் எம். எஸ். முத்துஅவர்கள் தலைமையில் மேற்படி விழாகொண்டாடப்பட்டது. அப்போது தலைவர் முன்னுரையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் செய்த தொண்டையும், ஏன் திராவிடர்கழகம் திறக்கவேண்டும்? என்பதைப் பற்றியும் மிகவிளக்கமாகப் பேசியபின் தோழியர் எம். எஸ். சத்யவாணிஅம்மையார் கழகத்தின் அவசியம், திராவிடநாடு பிரிந்தால் அதனால் என்னென்ன நன்மைகள் உண்டு, என்பதைப்பற்றியும், தோழர் கோபாலன் அவர்கள் திராவிட மக்களின் எதிர்காலதிட்டம் என்பதைப் பற்றிப் பேசியபின், தோழர் நடேசன் அவர்களால் வந்தனோபசாரம்கூறப்பட்டு, கூட்டம் 9-30 மணிக்கு இனிது முடிந்தது. மேற்படி கழகத்திற்கு தோழர் கே. சுந்திரவேலு தலைவராகவும், தோழர் பி. துரைராஜன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## திராவிடர் கழகம்

### திருப்பத்தூர்.

சென்னை மாகாண சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி இவ்வூரில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டது.

தலைவர்— சின்னத்துரை.

செயலாளர்—இமயவரம்பன்.

---

## திராவிடர் கழகம்,

### சூலூர்.

13—9—44 புதன் இரவு 10மணிக்கு சூலூர், கோயமுத்தூர் ரோட்டில் திராவிடர்கழகம் ஒன்று நிறுவப்பட்டது. அதில் நம் பெரியார் விழா கொண்டாடப்பட்டது. கூட்டம் தோழர் K. வேலாயுதம் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் பெரியார் அவர்களின் அரிய சேவையையும், வேலையையும் பாராட்டி பேசியதுடன் திராவிடர்களாகிய நாம் அவரது திருத்தொண்டை விடா முயற்சியுடன் செய்துமுடிக்க வேண்டுமெனச் சொற்பொழிவாற்றினர். பிறகு இதையொட்டி தோழர்கள் குமாரவேலு, புலிகேசி, இராவணன், முதலியோர் பேசினர். பின்னர் தோழர் ரத்தினம் அவர்களால் தலைவருக்கும், மற்றவர்க்கும் நன்றிகூறியதும் இரவு 11¼-மணிக்கு கூட்டம் இனிதுமுடிந்தது. கூட்டத்திற்கு அநேகர் வந்திருந்தனர்.

---

## திராவிடர் கழகம்

### எட்டயாபுரம்

15—9—44ல் P. பெருமாள் திராவிடகழகத்தை திறந்துவைத்துஅதன் அவசியத்தைப்பற்றிப் பேசினார்கள். தோழர் அருணகிரிகூட்டத்திற்குத் தலைமை வகித்தார். R. P. S. நாராயணன், M. ஆத்தியப்பன் எஸ். சண்முகசுந்தரம் முதலியோர் பேசினார்கள். பின் சு. அருணகிரி தலைவராகவும், எம். ஆத்தியப்பன் செயலாளராகவும் N. S. சுப்பையா, பொருள் காப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

## திராவிடர் கழகம்,

### நீலகிரி ஜில்லா.

14—9—44 மாலை 7மணிக்கு உதகமண்டலத்தில் வழக்கறிஞர் கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நீலகிரி ஜில்லா திராவிடர் கழகம், ஸ்தாபிக்கப்பட்டது. அதுசமயம் நீலகிரி ஜில்லா பிரமுகர்கள் அநேகர் விஜயம் செய்திருந்தனர்.

எம். கிருஷ்ணசாமிமுதலியாரைத்தலைவராகவும் கே. துரைசாமி நாயுடு அவர்களை உபதலைவராகவும் பண்டிட் ஜெய்லானியை காரியதரிசியாகவும், தேர்ந்தெடுத்தனர்.

நமது இயக்க அன்பர்கள், பாளயக்கோட்டை இப்ராகிம், ஈரோடு சி. ஆர். நாயுடு மேட்டுப்பாளையம் ராஜா தங்கவேலு, முதலியவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

பண்டிட் ஜெய்லானி அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களைக்கொண்டுவந்து விளக்கமாகப்பேசத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. திராவிடர்கள் நிதிதிரட்ட நமது இயக்கத்தலைவர்களை டிரஸ்டியாகவைத்து குறைந்தது ஐந்து லட்சம் ரூபாய் திரட்டும்படி இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

2. "திராவிடநாடு ஏன்?" என்று விஞ்ஞானரீதியாக ஒருபுத்தகம் எழுதவேண்டும். அதில்திராவிடநாட்டு, எல்லை விளைபொருள்கள், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள், பாதுகாப்புமுறைகள், தொண்டர்சிறப்பு, புதுப்பிக்கும் வழிகள் கலையின்பெருமை முதலியன திகழவேண்டும். அதை திராவிடமொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து மலிவான விலைக்கு மக்கள் வாங்கிப்படிக்க வழி செய்யவேண்டும்.

3. "ஜஸ்டிசைட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையை ஈரோட்டிலிருந்து அதி விரைவில் நடத்தும்படி பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

4. சமீபத்தில் வரப்போகும் "தசரா" விடுமுறையில் திராவிட மாணவர்களை ஆங்காங்கு பொதுக்கூட்டங்களை கூட வைத்து இயக்கபிரசாரங்கள் செய்யும்படி தூண்டுகோல்செய்ய எல்லா திராவிடகழகங்களையும் கேட்டுக்கொள்கிறது.

# திராவிட நாடு.

காஞ்சி 24—9—44 ஞாயிறு

## கதிரவன் கொட்டகையில்!

வீழ்ச்சியுற்றுக்கிடக்கும் ஒரு இனம் வீரவாழ்வை மீண்டும் பெறவேண்டுமானால், அதற்கு ஒரு மார்க்கம், கிளர்ச்சி! திராவிடநாடு, திராவிடர் கழகம், திராவிடர் என்ற எண்ணமும், அதை அடிப்படையாகக்கொண்ட கிளர்ச்சிபுமே,தேங்கிக்கிடக்கும் நமக்குத்தென்றல். நமது தென்றல் அவர்களுக்குப் புயலாக இருக்கிறது! குற்றம் அவர்களின் உடல், உள்ள அமைப்பையொட்டியது. பாகும் தெளிதேனும், பாலும் பழமும், காய்ச்சல்காரனுக்கு இனிக்காது. குருடன் அறியான் நீலநிறவானத்திலே நின்றாடும் நிலவின் அழகை! இருசெவியும் கெட்டோனுக்கு இசை இன்பம் தெரியக்காரணமில்லை! பட்டமும் பதவியும்பெற, பரங்கியின் பாசத்துக்காக, பங்கம்வரினும் ஏற்றுக்கொள்ளும்தங்கக்குணமுடைய, அரசியல் சிங்கங்களுக்குப் பட்டம் ஒழிப்பு, பதவி வெறுப்பு, முதலியனவற்றைக் கேட்டாலே, சித்தம்சோர்வடையும் இதுசகஜம். இயல்புக்கு ஏற்றபடி எண்ணம் அமைவதும், எண்ணத்தையொட்டி செயல்முறை திட்டப்படுவதும் முறையுங்கூட. மாளிகையிலே அமர்ந்து சாளரத்தின் வழியாகக் காணும்போது, மாலையிலே மலர்ச்சோலையிலே மதிமுகவதிகளைக் கண்டு களிக்கும் மந்தகாசகுண மன்னனுக்கு, மக்களின் மண்மனையிலே கிடக்கும் கோரக்காட்சிகளைக்காண மனம் இடந்தருமா? சீமான்களின் சிரிப்பிலே சொக்கி நாம், நமது சிந்தனைக்குத் தளை பூட்டிக்கொண்டு, செய்வகைத்திறம் இழந்து, அவர்களுக்குத் துதிபாடித்தூபமிட்டு நிற்போம், என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களிடம், இன்று, நிமிர்ந்து நின்று, நினைப்பும் நிலையும் இருக்கும் விதத்தை விளம்பினால், பரிதாபம், அவர்களின் முகம்வியர்த்துக் கண்கலங்கி உள்ளம்வாடி, உடல் ஆடிடாது இருக்குமோ! அந்தக்கூத்துதான் நடந்தது, கதிரவன் கொட்டகையிலே, சென்னையில் 17ந் தேதி.

கொட்டகையிலே நடைபெற்ற அக்கூத்தின் சூத்திரதாரி, ஆசிரியர் பி. பா அவர்கள், மகிழ்ச்சி ததும்ப அக்காட்சியைக்கண்டிருப்பார். ஆஹா! கூட்டமென்றால் இப்படித்தானே இருக்கவேண்டும்? அழகானகாட்சி! ஆனந்தமான காட்சி! டாட்ஜ்காரும், வாக்சாலும், டாக்சியும் செவர்லேயுமாக வந்துநிற்கும்கோர்த்தியும், மோட்டார் ஒட்டிமுன்னால் இறங்கிக்கதவைத்திறந்து இரண்டடிபின்னாலேதள்ளி நிற்க, சுற்றுமுற்றும்பார்த்துவிட்டுச்சுருள் மீசையை முறுக்கியபடியோ, சுருட்டுப் புகையைச் சுருளாக வெளியிலேவிட்டபடியோ, சொகுசாகச் சீமான்கள் இறங்கும் இலட்சணமும், அவர்கள் எப்பதவியில் எவ்வளவு நாட்கள் இருந்தனர் என்பதுபற்றி எண்ணி அவர்களிடம், பதவி முன்பணிவோர் குழையும் காட்சியும், எவ்வளவு இனிப்புடைத்து! இப்படிப் பட்ட கூட்டங்களை அந்தக்கிழவர் மூலைக்கு அனுப்பிவிட்டு, சிறைப்பறவைகளையும், வறுமையாளர்களையும் கூட்டம் சேர்த்து, கிளர்ச்சி நடத்துவேன், போரிடுவேன், சிறைபுகுவேன், பட்டம் பதவி வேண்டேன், என்று கூறிவிடுகிறாரே இன்றல்லோ, எனது அருமைக்கட்சியின் அலங்கார சொரூபத்தைக் கண்டேன். வருக வீரர்காள்! வாழ்க தலைவர்காள்! புச்சிரெட்டிபாளையத்துப்பூமானேவருக! பழுத்திருக்கும் பத்ரோவே வருக! ராவ் சாகிபுகளே! பகதூர்களே! சர் ஆகவேண்டியவர்களே! வருக, வருக! என்றுகூறி இருப்பார் மனதிற்குள்ளும், மாலைவேளைகளிலே அவர்மனமகிழப்பேசித் தமது காலைப்போதைக் கழிக்கும்மார்க்கத்தைத் தேடிக்கொள்ளும், மாவீரர்களிடமும்.

அந்தப் பரம்பரைப்போக்குக்குப் பங்கம் விளையாதபடி பாதுகாக்கவேண்டித்தான் அன்று பலமாகப் போலீஸ் பந்தோபஸ்து இருந்தது என்று கருதுகிறோம்-பயமல்ல அதற்குக் காரணம்! அழைப்புப்பெற்றோர் வருக, அல்லாதார் வெளியே செல்லுக, என்றனராம், நாட்டை இனி நடத்தப்போகும் தலைவர்கள்! லிபரேடர் பத்திரிகையின் குறிப்பின்படி 60பேருக்கு அதிகமாகவே கூடினராம் அங்கு! அதிகம் என்றேகூறுவோம். அவ்வளவு ஆற்றலுடையோர் அறுவர்கூடினாலே போதும்.

> ஏறுமேயில் ஏறிசேலும்
> தீரமுகமொன்றே
>
> ஏழை எளியோர்காணு
> இன்பமுகமொன்றே
>
> கூறுமதிகார மதைக்
> கோருமுகமொன்றே
>
> குன்றுநிதி கொண்டதனுல்
> குளிருமுகமொன்றே
>
> மாறுபடு லோகமதில்
> மருளுமுகமொன்றே
>
> மந்திரிகளாக நகை
> சிந்துமுகமொன்றே
>
> ஆறுமுகம் போதுமினி
> யார்வருவர் முன்னல்
>
> ஆர்தர்ஹோப் முன்னின்று
> ஆடிவாலாமே!

என்ற திருப்புகழ்பாடித் திருப்திபெற்றிருக்கலாம். அறுபதுபேர்கூடினர், என்று அகமகிழும் அன்பர்கள், யாரைக்கண்டிக்கக்கூடினரோ, அவர், இந்த இலட்சணத் [illegible] சேர்த்துவிட்டதற்காக, அவரைத் தண்டிக்கக் கடமைப்பட்டவர்கள்தான்! ஆம், ஆறும் அறுபதும், பேரும் புகழும் தேடிக்கொள்ள ஊரார் அறியாத இடத்திலே உல்லாசவேளைக்காகக் கூடியநிலைமை இருந்தபோது, நாடு அறியாதுஇவர் தம் நாட்டத்தை. இந்தப் "பெரிய மனிதர்களின்" பெருங்குணங்களைப்பற்றி, நாவாரப்பேசும் நாயிறுகோக்கிகளும்,பிறரும், நலன்பலபெற்று, அவர்களின் நிலைபற்றிய புலன்விசாரித்து வாழ்ந்துவந்த அந்த வளமானகாலம் வரண்டுபோய், இருண்டுகிடக்கும் திராவிடத்திலே மீண்டும் ஒளி கிளம்பச்செய்தாகவேண்டும் என்ற உறுதியைத் திரியாக்கி, உழைப்பை நெய்யாக்கி, அறப்போரிலேமாண்ட மாவீரர்களின் மண்டை ஓடுகளையே அகல்களாகக்கொண்டு, விடுதலை வீரர்கள் விளக்கேற்றத் தொடங்கியதும், இருள் இறந்துபடவே, இன்பவாழ்வுக்காக இளித்துவாழ்வதையே குறிக்கோளாகக்கொண்டு ஒருசிறு கும்பல்-கூத்திடுவது நாட்டினருக்குத் தெரியவந்தது. எனவே அக்கூட்டம், தன்குட்டுவெளிப்படுகிறதே என்று கூவுகிறது, கலக்கத்தால், காலம் மாறுகிறதே என்ற அச்சத்தால்! கதிரவன் கொட்டகையிலே கூடினவர்களின் கவலை எல்லாம், கும்பலுக்கு இடந்தரக்கூடாது என்பதுதான். நல்ல நோக்கம்!

ஆந்திரநாட்டு அண்ணல் பு. ராமச்சந்திரரெட்டியார் அவர்களைக் காணவேண்டுமென்று, நமது மக்கள் பல காலமாக ஆவலாக இருந்திருப்பார்கள், ஏன்? திருவாரூர் மாநாட்டிலே கண்டது அவருடைய திரு முகத்தை, அதற்குப்பிறகு, கண்டோமில்லை இதுவரை! தர்மம் நசித்து அதர்மம் மேலோங்கும்போது மட்டுமே நாம் அவதரிப்போம் என்று ராமே பரந்தாமன், அதுபோல் கட்சியின்புனருத்தாரணத்திற்கு மட்டுமேதான் இத்தகைய மாவீரர்கள், முன்வருவர்! மற்ற நேரத்திலே மாடும் மனையும், மக்களும் சுற்றமும், வேலையும் பிறவும், மலைபோலக்குவிந்துவிடும், என் செய்வர், எங்கு செல்வர்!

சண்டே அப்சர்வர் ஆசிரியரின், பெருமிதமான வெற்றி இது என்றும் நாம் கூறுவோம். "அரக்கர்கள் செய்யும்கொடுமையால், அரிபரந்தாமா! நாங்கள் படும் துயரம் ஆயிரம்நாவு படைத்த ஆதிசேஷனாலும் கூறமுடியாது," என்று தேவர்கள் வேண்ட, அலைகடலிலே ஆலிலைமேல் அரி துயிலிலிருந்த அரி கண்களைத் திறந்து, திருவாய் மலர்ந்தருளுகிறார், "தேவாதி தேவர்களே! அஞ்சற்க!அபயம் அளித்தேன்! விரைவிலே நாம், ஸ்ரீமகா லட்சுமியுடன் பூலோகத்திலேஅவதரித்து, சத்யத்தை ரட்சித்து அசத்தியத்தை அழிப்போம்,சென்றுவாருங்கள்" என்று.

அதுபோல நண்பர் பி. பா. வின் பஜனைக்கு, [illegible] அந்தத் தலைவர்கள், மனம் இறங்கியது, ஆசிரியரின் வெற்றிதான். அது வரையிலே அவர் திருப்தி பெறலாம்!

நாம் அந்தப்பெருந்தலைவர்களைக்குறை கூறுகிறோம் என்று எவரும் எண்ணற்க! அன்றைய கூட்டத்திலே, அன்பர் பு. ராமச்சந்திரர் ஆற்றிய உரையை ஆதாரமாகக்கொண்டே நாம் இதுபோலக் கூறினோமேயன்றி வேறில்லை.

We have been inert from
The party point of View

என்பது, புனருத்தாரணக் கூட்டத்தில் தலைமை தாங்கிய பூமானின் பொன்மொழி! வாய்மையை மறவாத அவருடைய குணத்தை நாம் பாராட்டுகிறோம். "கட்சியைப் பொறுத்த மட்டிலே நாம் இதுவரை மந்தமாக, இருந்து வந்துவிட்டோம்" என்பது அவருடைய வாசகத்தின் பொருள்! புன்னகையை அடக்கிக்கொண்டு, மேலும் சொஞ்சம் கேளுங்கள் பிறகு ஒரே அடியாகச் சிரிக்கலாம்.

"யாரைக்குறை கூறுவது? எல்லோரையுந்தான்! தலைவர்கள் எதிரிலே தற்புகழ்ச்சி செய்வதும் தாளம் போடுவதும், தலைமறைந்ததும்குறைகூறுவதும் துண்டுணி பேசுவதுமாக இருந்தவர்களை எல்லாம் குற்றங்கூற வேண்டியதுதான். கட்சியினால் பலன்களைப் பெற்றுக்கொண்டு, அவை கட்சியினால் கிடைத்தவை என்று ஒப்புக்கொள்ளவோ, மற்றவர்களுக்கும் அவை கிடைக்கச்செய்வோம் என்ற எண்ணங்கொள்ளவோ மனமின்றி இருந்தவர்களை எல்லாம் குறைகூற வேண்டியதுதான்."

இந்தப்படப்பிடிப்பிலே, நாடு காணும் முகங்கள், எவை எவை! அவைகளை நம்பித்தான், புனருத்தாரணம் ஆரம்பமாகிறது. எவ்வளவு பொறுத்தம், எவ்வளவு முறை!

ஓ! இந்தப்படப்பிடிப்பிலே, பெரியாரையும் சேர்த்துத்தான் இருப்பார் தலைமை பூண்ட தன்வான், என்று கூடு தேடும் குருவிக்கூட்டம் கூவும், அந்தச் சந்தேகத்திற்கு இடம் வைக்காதபடி, அன்பர்ராமச்சந்திரரெட்டியார். "ஈ.வே. ரா. விடம் எனக்குப் பெருமதிப்புஉண்டு. கட்சீயின் பெருந்தலைவர்களிலே அவர் ஒருவர்" என்றும் கூறினர், சுயநலமிகளுக்குச் சூடும் தந்தார், தளராதுஉழைக்கும் பெரியாருக்குத் துதியும் பாடினர். இது பிடிக்குமா சர். பத்ரோவுக்கு! கட்சியினால் பலன் பெற்றவர்கள், பிறருக்கு அவைகள் கிடைக்கும்படி செய்ய மனமில்லாதவர்கள், கட்சி வேலையைக் கவனியாது கண்மூடி மௌனியாகிக் கிடந்தவர்கள்" என்றெல்லாம் புச்சிரெட்டி பாளையத்தார் பேசுவது, நம்மைக்குறித்துத்தானே, என்று சர் பத்ரோ எண்ணியிருந்திருக்கக்கூடும். பட்டமும் பதவியும் பெற்ற பழங்கிழவரல்லவா அவர். எனவே வெகுண்டார், நாவை ஏவினர், வசையைக்கக்கினர், இந்தவயோதிகப் பருவத்திலே.

"சுயமரியாதை இயக்கமாம், சுயமரியாதை. யாருக்கய்யா இல்லை, சுயமரியாதை! உலகிலே வேறு எங்கேனும் உண்டா இதுபோல் சுயமரியாதைக் கட்சி" என்று கோபித்துக்கூறினராம், கூறிவிட்டு ஒரு அருமையான, நகைச்சுவைக்கு எந்நாட்டு ஏடுகளிலும் காணக்கிடைக்காத ஒரு வாசகத்தை வீசினராம் "இந்த ராமசாமி நாயகருடைய வேலைத்திட்டம் இருக்கிறதே, இதனால் மன எழுச்சி பெற்றவர்கள் ஒருவராவது உண்டா?" என்று கேட்டாராம். எவ்வளவு உயர்தரமான இடத்திலே உதித்திருக்கிறது இந்த உளறல்! என்று உண்மையிலேயே ஆச்சரியப்படவேண்டி இருக்கிறது.

மன எழுச்சி, சுலபமாக ஏற்படக்கூடியதல்ல! மதிவேண்டும், முதலில், பிறகு, நல்லமனம் வேண்டும், எழுச்சிக்குத் தேவையான இயல்பும் எண்ணமும் வேண்டும். பெரியார் ராமசாமி, 'ஞானப்பாலை' உண்டவரல்ல, எலும்பைப் பெண்ணுருவாக்குவதுபோல, முதலைஉண்டபாலனை எழுப்பியதுபோல, திராவிட இயல்பை இழந்தவர்களை வீரர்களாக்கவோ, பதவிப்பாம்பினால் தீண்டப்பட்டவரைஉயிர்ப்பித்துப்பணியாளராக்கவோ, அவரால் முடியாதுதான்! மரக்கட்டைகளைச்சித்திரமாகச் செதுக்கி, வர்ணம் தீட்டி, வகைவகையான ஆடை அணி பூட்டி, உயிருள்ளதுபோலச் செய்ய முடியுமே தவிர, உயிரையே ஊட்டமுடியாது. மக்கட் பிறவியிலும், மரக்கட்டைபோல், மனஎழுச்சிக்கே இலாயக்கற்றவர்கள் உண்டு. பெரியாரின் பெருந்தொண்டு அவர்களை நல்வழிப்படுத்தவில்லை. மக்கள் மன எழுச்சி பெற்றனர், இன எழுச்சியை இன்று காண்கிறோம். போர்ஹாம்பூருக்கும் டெல்லிக்கும் இடையே உள்ள இருப்புப்பாதையே இகலோக சுகசாதனம் என்று கருதும், சர். பத்ரோ இதனை அறியார்! அவர் நாடு சற்றுப் பெரியார்!! நாம் அறிவோம், நாடு அறியும், பெரியாரின் பெருவெற்றி எதுவெனில், மக்களிடை அவர் உண்டாக்கிய மன எழுச்சிதான்!

17—9—44லே கூடினரே அவர்களுக்குநினைப்பூட்டுகிறோம், ஆரியம்அலற, திராவிடம் மலர, ஊர்க்குடிகெடஉழைக்கும் உலுத்தமுறை உலர, ஆரம்பமாகிஇருப்பது, அந்தமன எழுச்சியினால்தான்! சாதிசமயப் பிணக்கு பிணமாகி, மதிமணம்வீசி, மாற்றானுக்கு இடங்கொடேல் என்றகுணம் நாட்டிலே தோன்றி இருப்பது, அந்தமன எழுச்சியினால்தான். தமிழர் பெரும்படைகள் உலவியதும், தமிழர் அறப்போர் தொடுத்ததும், தவம்செய்கோலத்தினர் தாயகப்பணிக்குத் திரும்பியதும், அந்த மனஎழுச்சியினால் [illegible]. தாய்மார்கள் [illegible] புகுந்ததும், பால்மணம் மாறாப் பச்சிளங்குழந்தைகள் சிறையிலே தொட்டிலில் கிடந்ததும் அந்தமன எழுச்சியின் பாற்பட்டவைகளே. மனையும் மகிழ்வும் துறந்து களியும் கல்லும் கலந்து உண்டு கட்டுக்காவலில் காளைகள் கிடந்ததும், மனஎழுச்சியினால். தாலமுத்துவும் நடராஜனும் மாண்டது அந்த மனஎழுச்சியினால்தான். கருப்புக்கொடிகள் தமிழகமெங்கும் பறந்திடக்கண்டு கண்டறியாதனக் கண்டோம் என்று காங்கிரசார் கதறியது இந்த மனஎழுச்சியைக் கண்டதன் விளைவுதான். நாடெங்கும் தமிழர்கூட்டம் கிளம்பிற்று, ஊரெங்கும் உரையாடல் பெரியாரின் பெருந்தொண்டுபற்றியே, ஏடுயெல்லாம் இது பற்றியே எழுதலாயின. எட்டாத இடமில்லை, கிட்டாத கீர்த்தி இல்லை, தொட்டது துலங்கிற்று, பட்டமரம் துளிர்த்தது, பகைவர் குளிர்கொண்டனர், அந்த எழுச்சியினால். சர். பத்ரோ கேட்கிறார், யாராவது பெரியாரின் திட்டத்தால் மனஎழுச்சி பெற்றனரா என்று!

நாம் அறைகூவி அழைக்கிறோம், இந்த வாசகத்தை மக்களின் மாபெரும் கூட்டத்திலே, சர். பத்ரோ, வந்துகூறிப் பார்க்கும்படி. எவ்வளவுதான் கசப்பு, பட்டம் பதவி போய்விடுவதால் ஏற்படினும், இவ்வளவு கீழ்த்தரமான பேச்சு, சர். பத்ரோவினிடமிருந்து நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் ஆயாசப் படுவார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் ஆயாசம் அறிவை அறவே அழிக்கும் என்று நாம் நினைக்கவில்லை.

இப்போது, கட்சியிலே, இவர்கள்புகுத்தப்போகும் புதுமுறுக்கு, எந்தஅளவுக்கு வேலைசெய்யும் என்பதுபற்றிய ஆருடத்திலே நமக்கு அக்கரை இல்லை. அன்று வாக்களிக்கப்பட்ட 2045 ரூபாயும், அடுத்து சேலத்திலே அவர்கள் கூட்டப்போவதாகக்கூறும் மாநாடும், புதுத் தலைவர் பிரதிஷ்டையும், மதத்தைக் கலவாத அரசியல்வேலையும், கட்டுப்பாடும் பிறவும், எப்படி இருக்கும் என்பதை நாம்யூகித்துக்கொள்ள முடியும்.

"தேர்தலால் வருவதல்ல தலைமைப் பதவி. மக்களின் அன்பும் ஆதாரவும் அதற்குவேண்டும்" என்று மதிமொழி புகன்றார் அன்பர் பு. இராமச்சந்திரர். அம்மொழி வழிபார்க்கும் எவருக்கும் தமக்கு முன்னால், வெகுதூரத்திலே ஒரு உருவம் தடிஊன்றிக்கொண்டு, சால்வைநெகிழ, தாடிஅசைய, நடந்துசெல்வதைக்காணலாம்.

"பட்டம் பதவிகளை விட்டுவிடுவதென்பது, கேவலம் காங்கிரசின் செயலைக்

(8ம் பக்கம் பார்க்க)

## கதிரவன்

7-ம் பக்கத்தொடர்ச்சி

காப்பிஅடிப்பது. காங்கிரஸ் இயக்கமோ கண்டனத்துக்குஆளாகிவிட்டது" என்று கதிரவன் கொட்டகைக் கூட்டத்திலே, தலைவர் கூறினாராம். காங்கிரசின் செயலைக் கேவலமென்று கருதுவதோ, அவர்களின் முறையைப்பின்பற்றுவது பேதமை என்று பேசுவதோ, காங்கிரஸ் கண்டனத்துக்கு ஆளானது என்று கூறுவதோ, மாளிகைப்பேச்சு, மக்கள் மன்றத்திலே அது நிலைக்காது.

காங்கிரஸ் ஆங்கிலேயரைக் கண்டிக்கிறது. நாம் காங்கிரசல்லாதார். எனவே நாம் ஆங்கிலேயனின் அடிவருடவேண்டும் என்றுகூறுவது, திராவிடப்பண்பை இழந்தோரின் பேச்சு என்போம். காங்கிரஸ் பட்டம் பதவிகூடாது என்று கூறுகிறது. நாம் காங்கிரசின் விரோதிகள். எனவே நாம் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு பதவியிலே புரளத்தான் வேண்டும் என்று தர்க்கிக்கிறாரா, அன்பர், பு. இராமச்சந்திரர்என்றுகேட்கிறோம். ஒன்றுகூறுவோம் அவருக்கும் அவருடைய மனப்போக்கை ஆதரிப்போருக்கும், காங்கிரசைக் கண்டிக்க ஒரு கூவும்படை தேவை, அது நாம்தான்-இதற்காகச் சர்க்கார் நாம் கேட்காமலேகூட நமக்குப் பட்டம்அளிப்பர், பதவிதருவர், அவைகளைப்பெற்று, விருந்துபசாரத்தின்போது பார்ப்பனரல்லாதாரின் பரிதாபகரமானநிலைமையைப் பற்றிப் பேசிவிட்டு, பின்னர் பதஞ்சலி சாஸ்திரியாரோ, பங்கஜவல்லித்தாயாரோ கேட்டுக்கொண்டதற்காக மனமிளகி ஆரியவேத இதிகாசாதிகளை ஏற்றுக் கொண்டு, சடங்கு சம்பிரதாயங்களிலே ஈடுபட்டு வருவோம், என்று கருதுபவர்களுக்கு இனிப் பொதுவாழ்க்கையிலே இடமில்லை! சந்தேகமிருந்தால் பரீட்சித்துக்கொள்ளலாம். செலவு சற்று அதிகமாகும்! சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும், அரசியலைச் சூதாட்டமாக்கக்கூடாது, ஆங்கிலேயனின் அடிவருடக்கூடாது, இன எழுச்சிக்கான வேலைசெய்தல்வேண்டும், இவைகளே, திராவிடம் கேட்பது—எதிர்பார்ப்பது.

நமக்கும் காங்கிரசுக்கும், இரண்டே அடிப்படை மாறுபாடுகள்.


1. பார்ப்பனீய ஒழிப்பு.

2. திராவிடநாடு தனிநாடாதல்.

இவ்விரண்டிலே யன்றி, மற்றவற்றிலே மாறுபாடு இல்லை. நாம் சர்க்காருக்குக் கங்காணிகளாகிக் காங்கிரஸை எதிர்ப்பவர்களல்ல, நாம்திராவிடக்காங்கிரஸ்என்றால் அதிலேதும் குற்றமில்லை. நாம் திராவிடர், நமக்குத்தேவை திராவிடநாடு, இதனைநாம் திராவிடர் கழகமூலம் கேட்கிறோம். போருக்கும் கிளர்ச்சிக்கும் புறம்பாக இருக்கவேண்டுமென்று விரும்பும் பூமான்களும் சீமான்களும், கதிரவன் கொட்டகையிலோ காமக்கோட்டத்திலோ, பதவிபுரியிலோகூடட்டும்,வெள்ளையரின் வரம்தேடட்டும், வாழட்டும், நம்மிடம்என், வம்புக்குவரவேண்டும், என்றே கேட்கிறோம்.


23-9-44 முதல் வெற்றிகரமான 3வது வாரம்!

சென்னை
ஒற்றைவாடை
தியேட்டரில்
★
நகைச்சுவைஅரசு திரு
என். எஸ். கிருஷ்ணன்
அவர்களின்
★
மதுரை
ஸ்ரீ மங்கள பாலகான
சபையாரால்



★
பூம்பாவை புகழ்
கே. ஆர்.
இராமசாமி
நடிக்கும்
நாடகம்.
★

மனோஹரா

செவ்வாய், வியாழன், சனி, 9-30 மணிக்கும் ⎫ நடை-
புதன், வெள்ளி, ஞாயிறு, 6-30 மணிக்கும் ⎭ பெறும்

சனி, ஞாயிறுகளில் காம்பிளிமெண்டரிடிக்கட்செல்லாது.
திங்கள்தோறும்நாடகம்கிடையாது. P.V.E. மானேஜர்.

# சேலத்துப் பாசறையில்...!

❀❀❀❀❀❀❀❀❀❀❀ மா. குமாரசாமி. ❀❀❀❀❀❀❀❀❀❀❀

சேலத்துப்பாசறையில் சென்றதிங்கள் கூடியபடைவீரர் கூட்டமங்குதிரண்டு குழுமிய ஆயிரமாயிரம் மறத்தமிழரது வீர முழக்கம், அந்த அஞ்சா நெஞ்சினரின் தன்னுணர்வுப் பெருக்கம், அந்த உணர்ச்சியிற் பிறந்த ஊக்கம், உழைப்பு, உறுதி, உற்சாகம், இவை அத்தனையும் செந்தமிழர் உள்ளத்தில் என்றும் நிழலாடும் பெற்றியுடையவை. நாடு நகரங்களிலிருந்தும் பட்டிதொட்டில்களிலிருந்தும், வந்து குவிந்த திராவிடர் முன்னணிகள் ஒருபால். தமிழகத்தை நெடுநாட்களாக மூடிக்கொண்டிருக்கும் பழமைப் பாசியைத் துடைத்திடத் துடிக்கும் புதுஉலகக் கருத்தினர் ஒருபால். "வரலாற்றிலே உயர்ந்து பொலிந்து ஓங்கிய இனம், சுற்றும் சூழலும் அஞ்ச வாழ்ந்த இனம், வடவரைவென்று வீழ்த்திய இனம், கங்கைகொண்ட சோழன் இனம் இன்று பெற்ற வீழ்ச்சியை வீழ்த்துவோம், அறிவுந் திறனும் செறிந்த நாடென இனி மாற்றுமோம்; செந்தமிழகத்தைச் சீர்திருத்த நிலையமாய்த் திருத்துவோம்" என்றுமார்தட்டித்தோள்குலுக்கும் அந்த மாணவ மணிகள் ஒருபால். தலைவர் விட்டதாக்கீதுகளைத்தகுமுறைநிறைவேற்றுந்தளபதிகளும், செந்தமிழர் போராட்டத்தில் எங்கள்பங்கு அன்றுபோல்இன்றுமுண்டு, என்று முழங்குந்திராவிடவீராங்கனைகளும் ஒவ்வோர்பால். மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நமை மாட்டநினைக்குஞ் சிறைச்சாலைஎன்ற பண்மிழற்றலே ஒவ்வொருவர் உள்ளத்திலும். எங்கும் தமிழர் முழக்கம்! எங்கும் பெருவீரம்! யாண்டும் உணர்ச்சி! எங்கணும் உற்சாகம்!

சேலத்துப் பாசறையில் அன்றிருந்தோர் ஒவ்வொருவரும் தெள்ளத்தெளிய உணர்ந்திருப்பர், திராவிடர் உளந்தோறும் பெரியாருக்கு இருக்கும் பெருமதிப்பு எத்தகைத்து என்பதை. சேலத்துப் பாசறையில் சூதும் சூழ்ச்சியும் நடமாடும் உள்ளங்களும், ஒன்றிரண்டு உடன் உலவின என்பதுஉண்மைதான். ஆனால் வெள்ளம்போல் திரண்ட இம்மக்கட்கூட்டத்திடையே தமிழர் தன்மானக் கடலிடையே அச்சூழ்ச்சிப்பொறிகள் யாண்டோமறைந்துபோயின. உள்ளபடியே சேலம் மாநாட்டுக் காட்சியும், சிலர்பால் அஃது எழுப்பிய மிரட்சியும் அப்பாடிவீட்டுப் படைத்திறமும், பெரியார் அவர்களின் அன்றைய சின்னஞ்சிறுபேருரையும், பெரியார் எங்களின் தலைவர் என்ற வானோக்கி எழுந்த பெருமுழக்கும் திராவிடர் உள்ளத்தில்என்றும் அழியாத இலச்சினையைப் பொறித்துவிட்டன. சேலம் மாநாடு சுயமரியாதை இயக்க வரலாற்றிலும் ஜஸ்டிஸ் கட்சி வரலாற்றிலும் இரண்டிலுமே தனிச்சிறப்புடைய ஓர் திருப்புமையம். (Turning Point)

சேலத்துப் பாசறையில் வகுக்கப்பட்ட போர்முறைகள் அச்சம் தயை தாட்சண்யமற்றவை. அங்கு தீட்டப்பட்ட திட்டங்கள் அத்தனையும் வீழ்ச்சியுற்ற சமுதாயத்திற்கு எழுச்சியூட்டும் திறத்தவை. அங்கு நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்கள் யாவும் உயிர்ப்பாற்றல் மிக்கவை, உணர்ச்சி வளம் செழுமியவை, விறுவிறுப்பு நிறைந்தவை. "நாம் திராவிடர். நமது நாடு திராவிடநாடு. நமது கழகம் திராவிடர் கழகம்." இதுவே அங்கு நிறைவேறிய தீர்மானங்களின் உயிர்நாடி. எந்தவிலை கொடுத்தேனும் திராவிடத்தைப் பெற்றே தீர்வது என்பது உறுதிச்சொல். கட்டுக் குலைந்து கலகலத்துப்போயிருக்கும் நமது சமுதாயம் சீர்திருத்த முறைவேண்டின், சமுதாய முறையே மாற்றி அமைக்கப்பெறல் வேண்டும். திருந்திய சமுதாயஅடிப்படையின்மீதே திருந்திய திராவிடம் எழுப்பப் பெறமுடியும் என்பதே தீர்மான விளக்கம். நாட்டுமக்கள் உள்ளத்திலே நம்மைபற்றிப் படிந்துள்ள மாசு துடைக்கப்படவும், ஆட்சியாளரின் சுருங்கிய பார்வை விரிவுறவும், நம்மைப்பற்றிமற்றையஇனத்தவர் மனப்போக்கிலே மாறுபாடு நிகழவும், நம் இயக்கத்துள்ளாகவே உழைப்போருக்கும் உழைப்பின் பலனை நுகர்வோருக்கும் இடையே உள்ள பாலம் அறுபடவும் தோழர் C. N. A. அவர்களால் பட்டமறுப்புத் தீர்மானமும், பாண்டியனாரின் பின்மொழிதலுடன், நிறைவேறியது. மாநாட்டுச்சேதி இது. திட்பநுட்பம் செறிந்த, அழுத்தந்திருத்தமான, தேவையும் முதன்மையுமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றுள்ளன. இனநலத்தில் சிறிதளவு நாட்டமுடையோரும் இதனை நன்கறியலாம்.

சேலத்துப் பாசறையில், திராவிட நாட்டவர் ஒருங்குகூடி நிறைவேற்றிய தீர்மானங்களால் தம்நிலை தாக்குண்டயாரோ சிலர் கேட்கிறார்களாம், இயக்கத்துப்பெயரைத் திராவிடர் கழகமென மாற்றுவதேன். திராவிடத் தோழர்களே! நீங்கள் கேளுங்கள் அவர்களை. நாம் இந்தியரல்லரென்று தீர்மானித்த பின்னர், நமது கழகத்தின்பெயர் தென்னிந்தியர் கழகமெனப் பொலிதல் பண்புடைமையோ தவறிய தன்மையோ என்று கேளுங்கள். ஏழையர் தோழன் டாக்டர் நடேசன் அன்று துவக்கியது திராவிடர் கழகமா அல்லவா. என்று கேளுங்கள். 25 ஆண்டுகட்கு முன்னர் சென்னையில் புரசையில் புதுபாக்கத்தில் நமதியக்க மன்றங்கள் திராவிடர் கழகம் என்ற பெயரிற் பொலிந்ததுண்டா இல்லையா என்று அவர்களைக்கேளுங்கள். 1917-ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சென்னைக்கு வந்தகாலை, பானகல் அரசர் அவர்களைப் பேட்டி கண்டது சென்னைத் திராவிடர் கழகத்துச் சார்பிலா அல்லவா என்பதையுங் கேளுங்கள். நாம் திராவிடர் அல்லர்என்று அந்நாளைய தலைவர்கள் கருதி இருப்பரேல், கட்சித் தினசரியின் பெயர் திராவிடன் என்று அந்த நாளிலே அமைக்கப்பட்டது ஏன் என்று கேளுங்கள். முஸ்லீம்கள் மன்றத்தின் பெயர் முஸ்லீம் லீக்; இந்தியர்கள் அமைப்பின் பெயர் இந்தியன் நேஷனல் காங்கிரஸ்; இந்துக்கள் கழகத்தின்பெயர் இந்து மகாசபை; மோமீன்களுடைய கழகம் மோமீன் லீக்; அஃரார்களுடைய அமைப்பு அஃரார் கழகம்; திராவிடருடைய கழகம் திராவிடர் கழகம். இது முறைதானே என்பதைத் தங்கள் நலவுரிமையிலே நாட்டங்கொண்டுள்ள அவர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். டாக்டர். நடேசன் இன்றைக்கிருந்தால் திராவிடர் கழகமெனும் பெயர் கண்டு எத்துணை மகிழ்ச்சியுற்றிருப்பார் என்பதை நினைவு கூருங்கள்.

மத சமுதாயப் புரட்சிக் கும்பலாம் பெரியாரும் அவர் படையினரும்! உண்மை! ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைக்கு மத சமுதாயச் சீர்திருத்தம் எந்த வகையில் மாறு? 1916-ல் வெளியான சர் தியாகராயர் அறிக்கை—நமதியக்கத்தின்தோற்றுவாய்பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களின்உரிமைச்சாசனம் கூறுவது இது:— "சமுதாய வாழ்க்கையில் பார்ப்பனர் முதலிடம் பெற்றிருப்பதும், உடலுழைப்பில்லாதவாறு அன்னார் வாழ்க்கைமுறை அமைந்திருப்பதும் மோட்ச உலகத்திற்கு வழிகாட்டிகளென அவர்கள்மதிக்கப்படுவதுமே இந்நாட்டில் பார்ப்பனரைப் பெருவாழ்வு வாழச் செய்துவிட்டது" இவ்வுரை சமுதாயப் புரட்சி உரை அல்லவா? எல்லாச் சமூகத்தினரும் ஒத்த உரிமையும் ஒத்த வாழ்வும் ஒத்த உயர்வும் பெறுதல் வேண்டும். இதுவே நமது இயக்கத்தின் இலட்சியம். இந்த இலட்சியம் நிறைவேற நாம் புரோகிதர் பிடிப்பினின்றும் உடனடியாக விடுதலைபெற வேண்டும். நமது இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதன் அடிப்படைக் காரணம் இதுவே" இத் தெளிவுரை 1917-ல் கோவை மாவட்ட பார்ப்பனரல்லாதார் மாநாட்டில், பானகல் அரசர் நிகழ்த்திய தலைமையுரையின் ஒரு பகுதி. இது மத சமுதாயப் புரட்சி உரை அல்லவா? அல்லவாயின் இதுதானே சேலத்துத் தீர்மானம்? "பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பது திராவிட மரபன்று; திருவள்ளுவர் முதலிய திராவிடத் தலைவர்கள் பிரம்மனின் முகத்துதித்தோம் யாம்

(10-ம்பக்கம் பார்க்க)

## சேலத்துப்பாசறையில்

9-ம் பக்கத்தொடர்ச்சி

என்று பொக்கம் பேசினரில்லை, பிறப்பினால் ஏற்றத் தாழ்வு கற்பித்தோரும் நால்வகைச் சாதி இந்நாட்டினில் நாட்டினோரும் ஆரியரே. அவ்வருணாச்சிரமக் கோட்டையை இடித்தெறிய 2400 ஆண்டுகட்குமுன்னர் தோன்றிய புத்தர் முயன்றார்; முடியவில்லை. பின்னே வந்த பற்பல சீர்திருத்த வாதியர் முயன்றார், தோற்றார். இராமாநுஜரும் புரோகிதக் கொடுமையைக் களைந்தெறிய ஒல்லும் வழி முயன்றனர், தோல்வியே கண்டனர். பார்ப்பனர் பிடி மேன் மேலும் அழுத்த முற்றே வந்தது. தீண்டாமை அண்டாமை பாராமை முதலிய சமுதாயச் சீர்கேடுகளும் படிப்படியே பரவிப் பெருகலாயின. அத்தகைய பலம் பொருந்திய சாதிக் கோட்டையைத் தகர்த்தெறிய இதுவே தக்க காலம்; இதுவே தக்க வாய்ப்பு" 1917-ல் கூடிய சென்னை மாகாண முதலாவது ஜஸ்டிஸ் மாநாட்டில் வெள்ளுடை தரித்த அண்ணல் சர். தியாகராயர் எழுப்பிய வீர முழக்கம் இது. அதன் மறுபதிப்புப்போலில்லையா சேலத்துத் தீர்மானம். வர்ணாசிரமக்கோட்டையைத் தகர்த்தெறிவோம் சாதிக்கட்டுகளைப்பொடிப்பொடியாக்குவோம் என்று விடுதலை வீரர் டாக்டர் நாயர் தீப்பொறிபறக்கப்பேசிய வாய்ப்புகள் பலப் பல; இத்துணையும் உணர்ந்த கூட்டந்தான்—உணர்ந்தும் உரைத்திட அஞ்சிடும் கூட்டந்தான் நம்மை மதப்புரட்சிக் கும்பல் என்கிறது. ஆமாம், நம்முடைய கும்பல் மதப்புரட்சிக் கும்பல்தான். சர். தியாகராயர் சிந்து விளையாடிய மதப்புரட்சிக் கும்பல்; அரசியல் ஞானி பானகல் நடமாடிய மதப்புரட்சிக் கும்பல்; டாக்டர் நாயர் அமைத்துக்கொடுத்த மதப்புரட்சிக் கும்பல், பகுத்தறிவியக்கங் கண்ட தலைவர் பெருந்தகை ஈ. வே. ரா. வின் தன்னுணர்வுக் கும்பல். ஆம், ஐயமில்லை, அம் மதப்புரட்சிக் கும்பலே என்று கூறிடுங்கள். இத்தனைஏன்? பட்டம் பதவியைவிட்டிடுவீரோ என்று கேளுங்கள் அந்த ஒரு கேள்வி போதும் அவர்களை அடக்க.

நாம் சற்று அழுத்தமாகவே தெளித்துரைக்க விழைகிறோம், இரண்டொரு "சாய்வு நாற்காலிகளில்" கூட்டுப்படை இந்நாட்டு இன எழுச்சியை அடக்கிவிட இயலாது. ஒருடஜன் அந்திவேளை ஆரியர் வாதிகளின் அணிவகுப்பு தன்மான இயக்கத்தின் தனியுணர்வுப்போராற்றலைத் தகைத்துவிட முடியாது. நாலாறு செல்லாக் காசுகளின் முன்னணி மக்கள் மன்றத்தில் நடமாடவும் இயலாது. நாம் அதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதுமில்லை. சேலம் அவர்களுக்கு அந்தப்பாடத்தைப் புகட்டிவிட்டது. எதை எதையோ எண்ணிக்கொண்டு, வேறு எதை எதையோ பேசிட ஒருங்கு சேரும் ஒரு கூட்டம், தேர்தல் கீதமும் அரசியல் பீடமுமே இயக்க வளர்ச்சிக்கு வழிகோலுவன என்று கருதும் ஒருகூட்டம், மக்கள் வாழ்வு சிறக்க இரண்டொரு பட்டம் பதவியை விட்டுவிடவும் மனம் ஒவ்வாத அந்த ஒரு கும்பல், ஒரு சிலருக்கு வாழ வழி வகுத்துத்தருவதே இயக்கப்பணி என்று கருதிவிட்ட அந்த "உள்ளூறு பகைவர்கள்" எதையோ செய்யட்டும், பட்டம் பதவியைவிட்டுவிட்மாட்டோம் என முழங்கட்டும். அதற்கொரு கட்சி அமைக்கட்டும்; சர்க்கார் மாளிகையை வலம்வரட்டும், மக்கள் கண்டு சிரிக்கட்டும். அன்னார் உள்ளத்தில் உறுவது ஒன்று; உரையில் எழுவது வேறுஒன்று, எழுத்தில் தீட்டுவது பிறிதொன்று, செயலில் நாட்டுதல்மற்றொன்று, என்பது மக்களுக்குத் தெரியாதா?

அச்செல்லாக் காசுகளின் சலசலப்புக்குச் செவிசாய்ப்பதல்ல நமது பணி. அது அவர்கள் பண்பு. ஆரியத்தாள்கள் அவர்களிடும் காட்டுக்கூச்சலைப் பெருந்தலைப்பிட்டுத்தருவது கண்டு இரக்க உணர்வு காட்டுவதல்ல நமது கடன். அது ஆரியர் பரம்பரைக்குணம், சேலம் செயலாற்றும் காலம் என்றதனியுரையை நெஞ்சில் நிறுத்துங்கள். "நினைத்ததைச் சாதிப்பதில் உயிரைக்கொடுக்கும் துணிபு எனக்குண்டு. அப்படிப்பட்டவர்கள் என்னிடம் மற்றும் சிலரேனும் உண்டு" அது பெரியாரின் பெருமுழககம். அதனைநினைவில் கொள்ளுங்கள். நமது இயக்கத்தை வலுப்படுத்துங்கள். திராவிடர் கழகங்கள் காணுங்கள். ஆயிரமாயிரம்உறுப்பினரைச் சேருங்கள். தனித்திராவிடம் காண முயலுங்கள். அது நமது பணி. பிற அல்ல. சேலத்துப்பாசறையில் வீரர் கூட்டம் விளைத்த முடிபுஅது. பிற அல்ல.

தந்தி:—"புறமார்க்" திருச்சி.




## வடசேரி, நெசவுத் தொழிலாளர் சங்கம்.

கோட்டாருக்கடுத்த வடசேரியில்கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க, 6-வது ஆண்டு விழா, 16—9—44 மாலை, வடசேரியில், தனியாக அமைக்கப்பட்ட கொட்டகையில், தோழர். அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. தோழர். ஆறுமுகம் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர். அண்ணாதுரையின் தலைமை உரையின்போது, பல தோழர்கள் கிளப்பிய கேள்விகட்குப்பதில் அளித்தார். தோழர். பொன்னம்பலனார்தொழிலாளர் முன்னேற்றம் என்பதுபற்றியும், கோட்டாறு தோழர். குணஸ்ரீதரன் தொழிலாளரும் கல்வியும் என்பதுகுறித்தும், பேசிய பிறகு, திராவிடநாடு தனி நாடாக வேண்டுவது ஏன் என்ற பிரச்சினைபற்றித் தோழர். அண்ணாதுரைபேசினார். சங்கச் செயலாளர் தோழர் பகவதி அவர்களின் நன்றி கூறலுடன் ஆண்டு விழா இரவு 10-30-மணிக்கு இனிது முடிந்தது. 16ல் பிற்பகல், கோட்டாறு தோழர். சண்முகம் அவர்கள் இல்லத்தில் இனிய விருந்தும், இரவு தோழர். R. இராமலிங்கம் அவர்களால், "பூஞ்சோலை விடுதியில்" விருந்தும் நடத்தப்பட்டது.

காலஞ்சென்ற சுபேதார்

## சுப்ரமண்யத்தின் விதவைக்கு.

### வருஷாந்திர உதவிப்பணம்.

காலஞ்சென்ற சுபேதார்சுப்ரமண்யம் க்யூ. வி. ஓ. மதராஸ் ஸாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்படையில், ஸாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ் க்ரூப். ஐ. இ-யைச்சேர்ந்தவர், இவருடைய விதவைக்கு வருஷாந்திரஉதவிப்பணமாக ரூபாய் 525 கொடுக்கும்படி உத்தரவு பிறந்திருக்கும் விஷயம், தக்ஷிண ராணுவத்திலிருந்து வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை அறிக்கையில்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தாலியில் இவர் உயிர்துறந்தபின் இவருக்கு "ஜார்ஜ் க்ராஸ்" விருதுவழங்கப்பட்டது ஞாபகம்வரும். தன்னுடைய தோழர்களின் உயிரைக்காப்பாற்றுவதற்காக, ஒரு கண்ணியின்மேல் விழுந்து, உயிர் நீத்தார். இந்த உதவிப்பணமானது, மதராஸ் ஸர்க்கார் கொடுத்தபணத்திற்குக்கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது

## திருமணம்.

திண்டுக்கல்லுக்கு அருகே 18-வது மைலிலுள்ள கல்வார்பட்டியில் சென்ற 10—9—44ல் திருமலைசாமி-இராசமாணிக்கம், வெங்கடாசலம்-சுப்பம்மாளுக்கும், பெரியார் E. V. R. தலைமையில் திருமணம் நடந்தது. மாலை நடந்த பொதுக்கூட்டத்திலும், திருமணத்திலும் பெரியார், பொன்னம்பலனார் பேசினர், வீராசன் நன்றிகூறலுடன் விழாக்கள் இனிதுமுடிந்தன.

# திராவிடநாடு.

2-ம் பக்கத்தொடர்ச்சி

கள் ஒரு பகுதியினர் பிரெஞ்சு மொழியும் மற்றொரு பகுதியினர் ஆங்கில மொழியுமன்றோ பேசுகின்றனர். அண்மையில் உருப்பெற்ற பொதுவுடைமைரஷ்யாவிற்குச் செல்வோம். அங்குள்ள மக்களெல்லாம் ஒரு மொழியே பேசுகின்றனரா? பல மொழியன்றோ பேசுகின்றனர். இங்ஙன மிருக்க இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் என் இவ்வாறு தமிழ்மக்களைக் கட்டாயப்படுத்துகின்றீர் என ஆச்சாரியரைக் கேட்டோம். ஆச்சாரியர் "இது நாளும் இத்தமிழ்ப்பண்டிதர்கட்கு ஒரு துளி அறிவிருக்கிறதென்று எண்ணியிருந்தேன். இப்போது அவர்கள் ஒரு துளியும் அறிவில்லாதவர்கள் என்பதை அறிந்து கொண்டேன்" எனக்கூறினர், இந்தியை ஒருஇராமசாமிதான் எதிர்க்கின்றான் என்று கூறினர். பின் எதிர்ப்பு எப்படி யாயிற்றென்று யாம் கூறி அவர் அறிய வேண்டியவரல்லர். திராவிடநாட்டுப் பிரிவினையையும்வலியுறுத்தி மறுக்க முடியாத காரணங்களைக் காட்டிப் பேசுகின்றோம். இவற்றையும் ஆச்சாரியார் ஆய்ந்து பார்ப்பாராக.

## திராவிடநாட்டின் கீர்த்திசால் வளங்கள்

திராவிட நாடு, மலை கடல் முதலிய அரண் செறிந்தது. இயற்கை வளம் சான்றது. இப்போது அடிமைப்பட்டிருப்பினும்வரலாற்றுக் காலந்தொட்டு பிறருக்கு அடிமையின்றி பிறரைஅடக்கிஆட்சிபுரிந்த நாடு. காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருனை முதலிய ஆறுகள் ஓடி வளம்செய்யும் நாடு, திராவிட நாடு. அசோக மன்னன் வடநாடு முழுமையும் அடிமைப்படுத்திஆண்டகாலத்திலும் அடிமை வாழ்வின்றிச் சுதந்திரத்துடன் திகழ்ந்தநாடு. திராவிட நாடு சேர சோழ பாண்டியர் ஆண்ட நாடு. பாபநாசம் முதலிய இடங்களில் உயர்ந்த நீர் வீழ்ச்சியைக்கொண்ட நாடு. அந்நீர் வீழ்ச்சியின் ஆற்றலில் எழும்மின்சார உற்பத்தியைக் கொண்ட நாடு. டால்மியா சிமெண்டு போன்ற உயர்ந்த தொழில் வளத்தைப் பெருக்குதற்கேற்ற இயற்கை வளத்தைப் படைத்த நாடு. சேலம் முதலிய இடங்களில் இரும்புக் கனிகளைப் படைத்த நாடு. திராவிடநாடு பஞ்சு விளைவிற்கும் பட்டிற்கும்பேர்வாய்ந்தநாடு. பக்கிங்காம் கர்நாடிக் முதலிய தொழிற்சாலைகளும், கோயமுத்தூரிலுள்ள பஞ்சாலை நெசவாலைகளும், மதுரை பொன்மலை முதலிய இடங்களிலுள்ள ஏனைய ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் படைத்தநாடு திராவிட நாடு. சென்னை மாநகரில் சிறந்த துறைமுகத்தைப் படைத்த நாடு. தென்னாற்காடு மாவட்டத்தில் கூடலூர், பறங்கிப்பேட்டை, புதுச்சேரி முதலிய இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கொற்கை தூத்துக்குடி முதலிய விடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை தொண்டி முதலிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரை அதிராமம் நாகபட்டினம் காவிரிப்பூம் பட்டினம் காரைக்கால் முதலிய இடங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சதுரங்கப் பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களிலும் மாக்கலங்கள் (கப்பல்கள்) வந்து வரிசை வரிசையாகத் தங்கிச் செல்வதற்குஉரியதுறைமுகங்கள் அமைக்கவசதியுள்ள—நாடு, திராவிடநாடு. காவிரியாறு பொன்கொழிக்கு மெனப் புலவர்கள் கூறிய மொழி பொய்க்காமல் காவிரி மணலை—அலைகொழிக்கும் மணலைக்கையில் அள்ளிப் பார்த்தால் பொன்விளையும் கனிகள், தமிழ்ப்பூமியிலுள. தமிழர்களே! பொன் சுரங்கங்களை உங்கள் ஆராய்ச்சி வன்மையால் கண்டு பிடியுங்கள். பொன்கனி நம்பூமியில் உளவென எமக்கறிவுறுத்தி வணங்கச் செய்யும்நாடு திராவிடநாடு. உலக நாகரிகக் கலைகள் பலவற்றிற் கடிப்படையா யமைந்த உயர் தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழியைத் தனி—மொழியாகப் பெற்றநாடு தமிழ்நாடு. உணவுப்பொருகளை மிகுதியும் (நெற்களஞ்சியத்தை) கொண்ட நாடு தமிழ்நாடு. காதலும் வீரமுமே கடைப்பிடியாகக் கொள்வோம் எனக்கழறிவடவரை வாட்டிக் கலிங்கத்துப் பரணி பெற்றநாடு தமிழ்நாடு. இவ்வளமெல்லாங் கண்டன்றோ ஆசிரியர் பூரணலிங்கம் பிள்ளையும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் திரு—இடம் என்ற சொற்களே திராவிடம் என்று மரீஇயிற்று எனக் கொண்டனர். ஆம்; திருவிடந்தான் திராவிடமாயிற்று எனயாமும் கொள்ளலாம். இச்சொல் இப்பொருள் குறித்ததாகக் கொள்ளாக்கால் வடமொழியாளர்குறிப்பிடும் இழிந்த பொருளை யாமேற்பதா? மூலச் சொற்களின் (Root) பாகுபாடறியார் எங்ஙனம் கூறினும் கூறுக. நம் தமிழ்ச் சொற்களைத் தீப் பொருளில் வடவர் கடன்வாங்கித் தங்கள்மொழியில் வேதத்திலேயும் அமைத்திருத்தல் சாலாதோ? யாம் திரு இடம் என்ற சொற்களே திராவிடம் என மருவி வழங்கி வழங்கியதாகக் கொள்வோமாக.

மேற்கூறப்பட்ட துறைமுகங்களையும் இரும்புக்கனிகளையும், பொற்கனிகளையும் ஏனைய வளங்களையும், பிறர்பயன்கொள்ளும் முறையிலேயே இனியும் விடமாட்டோம். எங்கள்நாட்டு இயற்கை வளங்களை யாங்கள் விரும்புகின்ற முறையில் பயன்படுத்த எங்கட்கு உரிமை வேண்டும் என்று வேண்டுவதுதான் திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டுமென்ற வேண்டுகோள்-போராட்டம். இவ்வளவு வளங்களையும் பிறர் சுரண்டலுக்காக்கி யாங்கள் இன்னும் எத்துணைக்காலம் எத்துணைத் தலைமுறை பஞ்சை மக்களாய் வாழ்வோம்! இனி விழித்துக்கொண்டோம் என்பதனைப் பிறர்க்கறிவிப்பதுதான் திராவிடநாடு திராவிடர்க்காக வேண்டுமென்பது. மேற்கூறப்பெற்ற பொருள்களைக்கொண்டு தோணிகள் செய்வோம், இருப்பாணிகள் செய்வோம். யந்திரம் செய்வோம், பொறி மந்திரம் செய்வோம், நீர்மூழ்கிக் கப்பல்கள் செய்வோம். போர்க் கப்பல்கள் செய்வோம். வானவூர்தியை வரையறையின்றி யமைப்போம். ஈருருளிசெய்வோம். எஞ்சின்கள் செய்வோம், புதிய புகைவண்டித்தொடர்களையமைப்போம். எங்கள் துறைமுகங்களை எதிரிகளணுகா வண்ணம் விமான எதிர்ப்புப் பீரங்கிகளையமைப்போம். எங்கள் வேட்டை விமானங்கள் எப்பொழுதும் போருக்குத் தயாராயிருக்கும். எங்கள் நாட்டில் இறக்குமதியாகும் பொருள்களுக்குமிறை வரி விதிப்போம், இந்நாட்டிற் போந்து சுரண்டும் வடநாட்டார் வாணிபத்திற்கிடங்கொடோம். சுங்கவரியை உயர்த்துவோம், அயல்நாட்டுப் பொருள்களில்எங்கள் தேவைக்குஏற்றாற்போன்ற பொருள்களே எங்கள் துறைமுகத்தில் இறங்க வேண்டுமென ஆணையிடுவோம். எங்கள் நாட்டுக் கப்பலிலேயே எங்கட்கு வேண்டிய பொருள்கள் அயல்நாட்டிலிருந்து வரவேண்டுமென வல்லரசாக விளங்கப் போகும் தமிழ்நாடு பிறநாட்டாரை நோக்கிக் கேட்கும் கடலாட்சி உங்கட்கு மாத்திரம் விடமாட்டோம் என வாதிடுவோம். எங்கள் கப்பல் அயல்நாட்டிற்குப்போக உரிமையில்லையாயின் அவர்கள் நாட்டுக்கப்பல் எங்கள் நாட்டில்-எங்கள் துறைமுகத்தில்-எங்கள் கடலில்வாக் கூடாதென ஆணையிடுவோம். உலகங்காடி (உலகமார்க்கட்) ஒவ்வொன்றிலும் தமிழ் நாட்டுப் பொருள் விற்கும்படியான முறையில் தமிழ்நாட்டில் உற்பத்திச்சாலைகளை மிகுதியாக்கி, ஆலைகளைப்பெருக்கிக் கணக்கற்ற தமிழர்கட்கு வேலைகொடுத்து உற்பத்திப்பொருள்களை மலைமலையாக உண்டாக்கிக் குவிப்போம், ஹென்றி போர்டின் மோட்டார்காரைக் காட்டிலும் தமிழ்நாடு மோட்டார்கார் சிறந்தது விலைநயமானது, வேலைப்பாடமைந்தது, உறுதியுடையதென உலகங்கூறுமாறு உயர்ந்த மோட்டார்களைச் செய்து உலகிற்களிப்போம். தமிழ்ச் சித்தவைத்திய முறையையும் ஆங்கிலவைத்திய முறையையும் ஆய்ந்து தமிழ்மக்கட்குற்ற நோய்களை ஒழிப்போம். கொள்ளைநோய்கள் இந்நாட்டில் இல்லையெனும்படி ஏற்பன செய்வோம். உடல் உரங்குன்றாமல் எப்பொழுதும் வீரர்களாக இருக்குமாறு தமிழர்க்கறிவூட்டி உடலூரமூட்டித் திராவிடநாட்டு வீரர்களாகத் திகழ்ச்செய்வோம். கைத்தொழில் முல்லையில் தமிழரை உலகில் ஒருவரும் வெல்லமுடியாதென உலகம் புகழுமாறு சிறந்ததொழிற் பாடமைந்த கைத்தொழில்களைச்செய்வோம். அத்தொழிலுக்கேற்ற யந்திரங்

(12ம் பக்கம் பார்க்க)

# திராவிடநாடு.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

களை அணியணியாக அமைப்போம். சுருங்கக்கூறின் ரஷ்யா அமைத்துக்கொண்ட பஞ்சவருடத் திட்டம் போன்ற ஒருதிட்டத்தை அமைத்துக்கொண்டு அத்திட்டத்தை நடைமுறையில் ஆட்சிக்குக் கொணர்ந்து வெற்றிபெறுவதற்குத்தலைவர்களை அமைப்போம்.

அரசாங்கம் அளிக்கவிருக்கும்தொழிற் கல்வி முதலிய எல்லா வசதிகளையும் தமிழ்வாலிபர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, எதிர்காலத் திராவிடநாட்டைச் சிறப்பிக்க உதவவேண்டும். இவ் வமயத்தைத் தமிழர்கள் விட்டார்களானால் மற்றோர்மையம் வாய்த்தலரிதாக முடியும். ஜப்பானைத்தாக்க இந்தியா தளமாக உபயோகப்படப்போகின்றது. நம் நாட்டைத் தளமாகக்கொண்டுநமக்காகப் போரிடும் பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்கும் நம்மாலியன்ற உதவிகளை யாம் முழுமனதுடன் புரிவோமாக.

### கைத்தொழில் வளனைக் காண்போம் நன்கு.

ஜப்பானைப்போல யாமும் தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்ள வியலுமா எனின், பெருக்கிக்கொள்ளலாமென நமக்குச் சீனு அறிவிக்கின்றது,

உலகத்தில் முதன்முதல் தாளை (பேப்பரை)க் கண்டுதவிய சீனுவின் தொழில் வளத்தைப் பாருங்கள், சீனுவிலே யந்திரத்தொழில் வளர்ந்துகொண்டிருக்கிறது, சீனு தனக்குவேண்டிய யுத்த தளவாடங்களில் 80 சதவிகிதம்தானே உற்பத்தி செய்கின்றது. சீனத் தொழிற்சாலைகள் நம்நாட்டைப்போலன்றிச் சீன நிபுணர்களாலும், சீனத்தொழிலாளர்களாலுமே நடத்தப்படுகின்றன. சீனுவில் செழிப்பானமாகாணங்கள் ஜப்பானியரின் ஆக்ரமிப்பில் இருப்பினும், பொருளாதாரநிலையைச்சீனுகைத்தொழிலைக்கொண்டு தளரவிடாமல் காப்பாற்றி வருகின்றது. தமிழ்நாட்டில் கிராமத்தொழில்களைவளப் படுத்தத் திட்டம்போட்டுவேலைசெய்தால் யாமும் தொழில்களை வளப்படுத்தக் கூடாதா?

இந்தியாவின் வடக்கு எல்லைக்கு அப்பால் சிறிது தூரத்திலிருக்கும் விரிவான "சைபீரியா" நாட்டைப்பாருங்கள். சைபீரியா தன்நாட்டுமக்கட்குக் குறைவின்றிக் கல்வியளித்து வருகின்றது. சிற்றூர்களில் போக்குவரவு அமைப்புக்களை ஒழுங்குற அமைத்து வருகின்றது. சைபீரியர் அந்நாட்டில் யாம் இதுவரையில் அறிந்திராத முறையில் விரிவான வகையில் தொழில்களை வளர்ச்சியுறச் செய்துள்ளனர். இவ்வாக்கவேலைக்கு உதவிப்பொருள்கள் சில ரஷ்யாவிலிருந்து வருகின்றன, சைபீரியாவைப் பின்பற்றி யாமும் என் திராவிடநாட்டுக் கைத்தொழில்களைச் சீர்படுத்திக்கொள்ளக்கூடாது.

தமிழர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையையுடையவர்கள். இவர்கள் எங்ஙனம் திராவிடநாட்டைப் பெறுவர் என ஒரு சாராரும், "இந்துஸ்தான் பாகிஸ்தான், சீக்கியஸ்தான் ஏற்பட்டாலும்திராவிடஸ்தான் ஏற்படாது; அது ஒருசிலர் மூளைக்குள்குடைந்துகொண்டுஇருக்கும்" என வெள்ளிநாப்புலவர் வலங்கைமான் சீனிவாச சாத்திரியாரும் கூறுகின்றனர்.

### எண்ணிக்கைக் குறைவு, உரிமையைத் தடுக்குமோ?

பாகிஸ்தானைக்கொள்கையளவிலேனும் ஒப்புக்கொள்ளுஞ்சிலர், திராவிடஸ்தானை எக்காரணங்கொண்டு, மறுக்கின்றனர்? அரசியல்காரணமா, மதங்காரணமா? ஆட்சி அமைப்புமுறை காரணமா, மக்கட் டிரள் காரணமா? தொழில் வளங் காரணமா? எனவினவெழுப்பும்போது மக்கள் திரளை மூன் காட்டுகின்றனர்.

நமக்குமுன் குடியேற்ற நாட்டுரிமையை அனுபவித்துவரும் (அஃதாவது) விரும்பினுல் பிரித்தானியக்கூட்டாட்சியிலிருந்து பிரிந்துபோகும் உரிமைபெற்ற நியூசிலாந்தில் மக்கள் பதினைந்து இலக்கம் பேரேயுளர். இவ்வுரிமையுடன் இனிது விளங்கும் அயர்லாந்தின் சனத்தொகை முப்பது இலட்சம்தான். அங்ஙனமே குடியேற்ற நாட்டுரிமையைப் பெற்ற ஆஸ்திரேலிய நாட்டின் மக்கட்தொகை 70 இலட்சந்தான். குடியேற்ற நாட்டுரிமையைப்பெற்ற தென்னுப்பிரிக்காவின் ஜனத்தொகை 95இலட்சந்தான். இப்பொழுது உலக வல்லரசுகளால் மிகுதியும், மதிக்கப்பெறும் துருக்கி நாட்டின் ஜனத்தொகை $1\frac{1}{2}$ கோடிதான்.

மேற்குறிப்பிட்ட நாடுகள் யாவும் எண்ணிக்கை குறைவாயிருந்தும் உரிமையின் பத்தைப்பெற்று அனுபவிக்கவில்லையா? 4 கோடி திராவிடர்கள் பிரிவினைவேண்டின் எண்ணிக்கைக் குறைவென்றால் எங்ஙனம் பொருந்தும்.

### யார் மூளைக்குள் எது குடையும்?

திராவிட நாட்டுப்பிரிவினை சிலர் மூளைக்குள் குடையுமெனச் சாத்திரியார் கூறுகின்றார். இது குறித்துப்பின்னர் ஆராய்வோம், யார்மூளையில் எதுகுடையும் என்பதை அன்பர்கள் அறிவார்களாக.

# ஸீக்பிரீட் அரண்.

ஜெனரல் பாட்டனின் படைகள்ஜெர்மன் எல்லையை நெருங்கிவிட்டதாம்.நேசவேவு கோஷ்டிகள் ஜெர்மனிக்குள்ளே பிரவேசித்திருப்பதாகவும், ஸீக்பிரிட் அரணுக்குப் பின்னால் நேசவிமான நடவடிக்கை நடந்துவருவதாகக் கூறப்படுவதாலும், ஜெர்மனியின் போராட்டம் அந்த தூரத்தில் இல்லையென்பது தெரிகிறது. ஜெர்மானியர்கள் இப்போது பிரான்சிலும், பெல்ஜியம், ஹாலந்திலும் உதைபட்ட தங்கள் படைகளை ஜெர்மன் எல்லைக்குப் பின்னால் கொண்டுபோய் ஜெர்மனியைக் காப்பதில் முனைந்திருக்கின்றார்கள். ஆகவே, "மேற்கு மதில்" என்று வழங்கும் ஸீக்ப்ரீட் அரண் மறுபடியும் செய்திகளில் அடிபட ஆரம்பித்திருக்கிறது.

1937ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தஅரணை 1938 மே மாதத்தில் "உலகத்திலேயே மிகவும் பிரம்மாண்டமான கோட்டை" என்று ஹிட்லர் வர்ணித்தார். இந்த அரண் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து, டச்சு எல்லைக்கு அடுத்தாற்போல் ஆக்கெலுக்குச் சுமார் 60 மைல் வடக்கேயுள்ள ஓர் இடம்வரை ஜெர்மன் மேற்கு எல்லையை ஒட்டியே செல்கிறது. புனர் நிர்மாணம் செய்யப்பட்ட இஸ்டன் கோட்டை, கெஉற்லேச் சுற்றியுள்ள கோட்டைகள், ஸ்ார் கோட்டைகள், கொலோன் தற்காப்புக்கள் இவைகளெல்லாம் இந்த மதில்உள்ள கேந்திரஸ்தாபனங்களாகும். இதில் முன்னணியில் 17000 காங்க்ரீட் கோட்டைகளும், பின்னால் அவற்றிற்கு ஆதரவாய் மூன்றுநான்கு தற்காப்புஅரண்களும் இருக்கின்றன. முள்கம்பி வேலிகள், கண்ணுக்கும் தெரியாதபள்ளங்கள் போன்ற பலவிதத் தடைகள் இருப்பதுடன், ஆயிரம்ஆயிரமாய் காங்கிரீட் கூம்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன, இன்னும் வேவுபார்ப்பதற்காகவும் பீரங்கிகள் சுடுவதற்காகவும் காங்கிரீட் கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால், மாஜினோ அரணில் இருப்பதைப்போல் இவற்றில் எழு தளங்களில்லை, மூன்று தளங்கள்தான் இருக்கின்றன. அவையும் அவ்வளவு பிரம்மாண்டமானவையல்ல. கோட்டை வரிசைக்குப் பின்னால் வரிசை வரிசையாய் யந்திர பீரங்கி ஸ்தலங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேற்கு மதில்தற்காப்போடு நெருக்கமாய் இணைக்கப்பட்டு அவற்றிற்கு சமதூரத்திலே "விமானத்தற்காப்பு" எற்பாடு ஒன்று இருக்கிறது. அதில் ஆயிரகணக்கில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இருக்கின்றன.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.